Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 29, 2022

வியாழக்கிழமை டிசெம்பர் 29, 2022 | ஒளி: 08 கதிர்: 175 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## 31 முதல் வாட்ஸ்அப் இயங்காது

இம்மாதம் 31ஆம் திகதி முதல் சுமார் 49 அலைபேசிகளில் வாட்ஸ்அப் தனது இயக்கத்தை நிறுத்திக் கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழைய அலைபேசிகள், பழைய இயங்குதளம் கொண்ட அலைபேசிகள் என சுமார் 49 வகைகளைச் சேர்ந்த அலைபேசிகளில் வாட்ஸ்அப் சேவையை பயன்படுத்த முடியாது எனத் தெரிகிறது.

தொடர்ச்சி P2

# சீனாவிலிருந்து இலங்கை வழியாக மதுரை சென்ற இருவருக்கு கொரோனா

“சீனாவில் இருந்து மதுரை வந்த இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதால் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்பில் இருந்த ஒருவரையும் தனிமைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது” என்று இந்திய மருத்துவத் துறை அமைச்சர் ம.சுப்பிரமணியன் விளக்கம் அளித்துள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களுக்கு கொரோனா தொற்று சோதனை செய்வது தொடர்பாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறுகையில்,

“சீனாவில் இருந்து 36 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் தனது இரண்டு பெண் குழந்தைகளுடன் தென்கொரியா, இலங்கை வழியாக மதுரைக்கு டிசெம்பர் 27ஆம் திகதி வந்திருக்கிறார். சீனா, ஜப்பான், தென் கொரியா,

தொடர்ச்சி P2



## அம்பேவெல பண்ணைக்கு 30 ஏக்கர் கைவிடப்பட்ட காணி



அம்பேவெல பண்ணைக்கு அருகாமையில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட 30 ஏக்கர் காணியை உடனடியாக அம்பேவெல பண்ணைக்கு வழங்கி அதன் அபிவிருத்திக்குத் தேவையான வசதிகளை முன்னெடுக்குமாறும், அதனை மேய்ச்சல் நிலமாகப் பேணி, கறவை மாடுகளின் உணவுத் தேவையை வழங்கும் கட்டமைப்புடன் இணைக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நுவரெலியா மாவட்டச் செயலாளர் மற்றும் ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

தொடர்ச்சி P2



# 20 இடங்களில் முட்டை 55 ரூபாய்

முட்டையை 55 ரூபாய்க்கு விற்பனை செய்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்று புதன்கிழமை (28) ஆரம்பிக்கப்பட்டது. அமைச்சர் மஹிந்த அமரவீர, பத்தரமுல்லையில் வைத்து இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். முதற்கட்டமாக கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களின் 20 இடங்களில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கமைய, கோட்டை ரயில் நிலையம், தெமட்டகொடை, கொம்பனி வீதி, தெஹிவளை, பத்தரமுல்லை, நுகேகொடை, மஹரகம, மீகொட, நாரஹேன்பிட்ட பொருளாதார மத்திய நிலையம், டொரிங்டன் முச்சந்தி, ஹோமாகம ஆகிய கொழும்பு மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 55 ரூபாய்க்கு முட்டை விற்பனை செய்யப்படவுள்ளது.

தொடர்ச்சி P2



# ருமேனியாவில் இலங்கையர்கள் சிக்கினர்

ருமேனியாவுக்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசிக்க முயன்ற இலங்கையர்கள் உட்பட 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ருமேனிய எல்லையில் பொருட்கள் ஏற்றிய இரண்டு டிரக்குகளில் மறைந்திருந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி வீட்டுக்குத் தீ: இருவரிடம் வாக்குமூலம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக பதவிவகித்த காலத்தில் கொழும்பு-7 இலுள்ள அவரது வீட்டுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை துரிதப்படுத்தியுள்ளனர்.

இந்தத் தீ வைப்பு சம்பவம் தொடர்பில், சமூக செயற்பாட்டாளர்களான அநுருத்த பண்டார, டானீஸ் அலி ஆகியோரே,

தொடர்ச்சி P2



# 151 பேரிடமும் சிஐடி விசாரணை

■ கனகராசா சரவணன்

வியட்நாம் தடுப்பு முகாமில் இருந்து விசேட விமானம் மூலம், வியாழக்கிழமை (28) அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையம் வந்தடைந்த 151 பேரிடமும் குற்றப்புலனாய்வு பிரிவினர் ( சிஐடி) விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். மியான்மாரில் இருந்து சட்டவிரோதமாக இலங்கையைச் சேர்ந்த 303 பேர் கனடாவுக்கு படகில் நவம்பர் 8ஆம் திகதியன்று சென்றபோது, படகு கடலில் மூழ்கும் நிலையில் காப்பாற்றப்பட்டு, வியட்நாம் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டனர். இதில் மீண்டும் நாட்டுக்குத் திரும்ப 151 பேர் விருப்பம் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## மணல், கல், களிமண்ணுக்கு புதிய அனுமதிப்பத்திர முறை



மணல், கல், மண், களிமண் ஆகியவற்றை கொண்டு செல்வதற்கான புதிய அனுமதிப்பத்திர முறை எதிர்வரும் 02ஆம் திகதி முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. கடந்த காலங்களில் மணல், கல், மண் உள்ளிட்ட கட்டுமான பொருட்களை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரங்களில் வாகன இலக்கம் மற்றும் பொருட்கள் கொண்டு செல்லப்பட வேண்டிய வீதி என்பன உள்ளடக்கப்படாமையால் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் பிரேம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ‘டுபாய் சுத்தா’வுக்கு சரீரப் பிணை



கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட ‘டுபாய் சுத்தா’ என அழைக்கப்படும் நிஷாந்த பிரியதர்ஷன, சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைகளுக்கு அனுமதிப்பத்திரம் இன்றி ஆட்களை அனுப்புவதாக எழுந்த குற்றச்சாட்டுக்கு அமைய, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டிருந்த அவர்,

தொடர்ச்சி P2

## மின் உற்பத்தி கப்பல் மூலம் மின்சார கொள்வனவுக்கு முஸ்தீபு

மின்சார நெருக்கடியை அடிப்படையாக கொண்டு அவசர மின்சார கொள்வனவின் கீழ் மின்சாரத்தை பெற்றுக்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அதன்படி, வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட மின் உற்பத்தி கப்பல் மூலம் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூட்டமைப்பின் அழைப்பாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## அறிவார்ந்தவர்களுக்கு சிறைச்சாலை ஒரு பல்கலைக்கழகம்



உலக வர்த்தக கட்டடத்தில் 34ஆவது மாடியில் காரியாலயத்தை நிறுவி, சுமார் 130 கோடி ரூபாயை மோசடி செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்த திலினி பிரியமாலிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த சகல வழக்குகளிலும் பிணை கிடைத்துள்ளது. ஆகையால், அவர் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த திலினி பிரியமாலி,

தொடர்ச்சி P2

## “புதிய படை உருவாகும்”



உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் களம், இன்னும் சில வாரங்களில் சூடு பிடிக்குமென எதிர்பார்க்கப்படும் நிலையில், எதிர்வரும் தேர்தலுக்கான போராட்டத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் வகையில் புதிய படை ஒன்று உருவாக்கப்படும் என காலி முகத்திடல் போராட்டத்தின் முன்னணி செயற்பாட்டாளர்களில் ஒருவராக செயற்பட்ட தனிஷ் அலி தெரிவித்துள்ளார். அந்தப் புதிய படையால் முன்னெடுக்கப்படும் தொடர்ச்சியான போராட்டங்கள்,

தொடர்ச்சி P2

## 497 கொலைகளுடன் 2022 இல் 29,930 குற்றச் சம்பவங்கள்

2022ஆம் வருடத்தின் இதுவரையான காலம் வரை 497 கொலைகள் உட்பட பாரிய குற்ற சம்பவங்கள் 29,930 பதிவாகியுள்ளன.

அவற்றில், 223 துப்பாக்கிச் சூடுகள் அல்லது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வொன்றிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது. பதிவான குற்றச் செயல்களில் 37 சதவீதமானவை மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளன. வடமேல் மாகாணத்தில் 13 சதவீதமும், தென் மாகாணத்தில் 10 சதவீதமும், சப்ரகமுவ மாகாணத்தில் 09 சதவீதமும், மத்திய மாகாணத்தில் 08 சதவீதமும் குற்றச் செயல்கள் பதிவாகியுள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சீனாவிலிருந்து இலங்கை வழியாக மதுரை சென்ற இருவருக்கு கொரோனா

ஹொங்கொங், தாய்வான் போன்ற ஐந்து நாடுகளிலிருந்து தமிழகத்தின் பன்னாட்டு விமான நிலையங்களுக்கு நேரிடையாக வந்தாலும் அல்லது இடம்மாறல் என்கின்ற வகையில் வேறு நாடுகளுக்கு சென்று வந்தாலும் அவர்களுக்கு RTPCR பரிசோதனை செய்ய வேண்டும் என்று மதுரை சுகாதாரத் துறை அலுவலர்கள் தொடர்ச்சியாக அறிவுறுத்தி வந்திருந்தார்கள்.

அந்தவகையில், இந்த மூன்று பயணிகள் சீனாவிலிருந்து தென் கொரியா, இலங்கை வழியாக மதுரைக்கு வந்து இருக்கிறார்கள். அவர்களை கண்காணித்து RTPCR பரிசோதனை செய்யப்பட்டதில் 36 வயது மதிக்கத்தக்க பெண்ணுக்கும், அவர்களுடைய ஒரு பெண் குழந்தைக்கும் தொற்று இருப்பது கண்டறியப்பட்டிருக்கிறது. இவர்களை அந்தப் பெண்ணின் சகோதரர் தன்னுடைய காரில் அழைத்துச் சென்று, விருதுநகரில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் அவர்களுடைய வீட்டிற்கு சென்றிருக்கிறார். கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டவுடன் அவர்கள் வீட்டில் தற்போது தனிமைப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். இவர்களுடன் பயணித்த இன்னொரு பெண் குழந்தைக்கு தொற்று பாதிப்பு இல்லை.



# 31 முதல் வாட்ஸ்அப் இயங்காது

ஆப்பிள் ஐபோன் 5, ஆப்பிள் ஐபோன் 5சி, ஆர்காஸ் 53 பிளாட்டினம், கிராண்ட் எஸ் பிளெக்ஸ் ZTE, கிராண்ட் எக்ஸ் குவாட், ஹெச்டிசி டிசையர், Huawei அசெண்ட் டி, அசெண்ட் டி1, அசெண்ட் டி2, அசெண்ட் ஜி740, அசெண்ட் மேட், அசெண்ட் பி1, குவாட் எக்ஸ்எல், லெனோவா ஏ820, எல்ஜி எனாக்ட், எல்ஜி லூசிட் 2, எல்ஜி ஆப்டிமஸ் 4எக்ஸ் ஹெச்டி மற்றும் எல்ஜி ஆப்டிமஸ் சீரிஸ் போன்கள், மெமொ ZTE, சாம்சங் கேலக்சி ஏஸ்2, கேலக்சி கோர், கேலக்சி எஸ்2, கேலக்சி எஸ்3 மினி, கேலக்சி டிரெண்ட் 2, கேலக்சி டிரெண்ட் லைட், கேலக்சி எக்ஸ்கவர் 2, சோனி எக்ஸ்பீரியா சீரிஸ்களில் 3 மாடல், விகோ போனில் 2 மாடல்கள் என மொத்தம் 49 போன்களில் இனி வாட்ஸ்அப் இயங்காது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 20 இடங்களில் முட்டை 55 ரூபாய்

கம்பஹா மாவட்டத்தின் வத்தளை, ஜா-எல, ராகம, நீர்கொழும்பு, கிரிபத்கொடை, கடவத்தை, பேலியகொடை ஆகிய பிரதேசங்களில் 55 ரூபாய்க்கு முட்டை விற்பனை செய்யப்படவுள்ளது. முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்துடன் ஒன்றிணைந்து இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி வீட்டுக்குத் தீ: இருவரிடம் வாக்குமூலம்

குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டு, அவர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு உள்ளது. குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விடுத்திருந்த அழைப்பின் பேரில், இவ்விருவரும் செவ்வாய்க்கிழமை (27) அந்தத் திணைக்களத்துக்குச் சென்று வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இந்நிலையில் அவ்விருவரிடமும் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அம்பேவெல பண்ணைக்கு 30 ஏக்கர் கைவிடப்பட்ட காணி

அம்பேவெல பண்ணைக்குச் சொந்தமான 'யுனைடட் டெய்ரீஸ் லங்கா லிமிடட் அம்பேவெல' புதிய பிரிவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செவ்வாய்க்கிழமை (27) மேற்கொண்ட கண்காணிப்பு விஜயத்தின் போதே மேற்படி அறிவுறுத்தல்களை வழங்கினார்.

அம்பேவெல பண்ணையின் பால் உற்பத்தித் துறையில் எட்டப்பட்டுள்ள முறையான வளர்ச்சியைப் பாராட்டிய ஜனாதிபதி, இது ஏனைய பண்ணைகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வதாகத் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மற்றும் அனுபவத்துக்காக இப்பண்ணையை திறந்து வைப்பதுடன் அதற்குத் தேவையான பின்புலத்தை தயார்படுத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அம்பேவெல பண்ணை, இலங்கை மற்றும் தெற்காசியாவின் பால் உற்பத்தி மற்றும் பண்ணை தொடர்பான அதியுயர் தொழில்நுட்ப பயன்பாட்டின் பிரதான மத்திய நிலையமாகச் செயற்பட்டு வருவதாக அம்பேவெல பண்ணைக் குழுமத்தின் பொது முகாமையாளர் சரத் பண்டார தெரித்தார்.

'யுனைடட் டெய்ரீஸ் லங்கா லிமிடட் அம்பேவெல' புதிய பிரிவில் தற்போது சுமார் 1,000 கறவை மாடுகள் உள்ளதோடு, அவற்றிலிருந்து தினமும் பால் சேகரிக்கப்படுகிறது. இந்த மாடுகளிடமிருந்து தினமும் 03 முறை பால் கறக்கப்படுவதோடு நாட்டின் பால் தேவையின் 40,000 லீற்றர் திரவப் பால் இப்பண்ணை உள்ளிட்ட ஒட்டுமொத்த அம்பேவெல கட்டமைப்பிலிருந்து சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றது.

இக்கறவை மாடுகளைப் பராமரித்தல், தேவையான உணவு மற்றும் பானங்கள் வழங்குதல், எடை நிறுத்தல், நோய் நிலைகளைக் கண்டறிதல், நோய் நிலைமை காணப்பட்டால் மாடுகளைப் பிரித்தெடுத்தல் போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் இயந்திரம் மூலம் சுயமாக நடைபெற்று வருகின்றன.

அம்பேவெல பண்ணைக் கட்டமைப்பு முழுவதும் உள்ள 4,500 மாடுகளுக்கு தற்போது உணவளிக்கப்படுகின்றது. 2001 ஆம் ஆண்டு அம்பேவெல குழுமம் நிறுவப்படுவதற்கு முன்னர், அது அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருந்தபோது, நாளொன்றுக்கு 1,500 லீற்றர் பால் மட்டுமே சந்தைக்கு விநியோகிக்கப்பட்டது.

தற்போது சிறந்த கறவை மாடுகளை இலங்கையில் உருவாக்குவதில் அம்பேவெல கட்டமைப்பு கடந்த 15 ஆண்டுகளுக்குள் வெற்றிக் கண்டுள்ளது. அதன்படி, இந்தக் கறவை மாடுகள் எதுவும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படவில்லை. மேலும் கறவை மாடுகளை இனப்பெருக்கம் செய்வதற்காக உலகில் தற்போதுள்ள அதிநவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. அதற்கமைய உலகிலுள்ள உயர் ரக ஆண் மாடுகளின் விந்தணுக்களை இறக்குமதி செய்து, மரபணு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இலங்கைக்குப் பொருத்தமான கறவை மாடுகளை இனப்பெருக்கம் செய்வது இந்நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஒரு பகுதியாக உள்ளது.

அதேபோன்று, கறவை மாடுகளுக்கு உணவளிப்பதன் மூலம் சுமார் ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. சோள விவசாயிகளின் முழுமையான விளைச்சலை அம்பேவெல பண்ணைக்கு பெற்றுக்கொள்ளும் பொறிமுறையும் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, ஆண்டுக்கு 25,000 மெட்ரிக் தொன் சோளப் பயிர்களை சேகரித்து, சேமித்து வைக்கும் வசதியும் அம்பேவல கட்டமைப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 151 பேரிடமும் சிஐடி விசாரணை

இதனையடுத்து உலக மீள்குடியேற்ற ஸ்தாபனமான (ஐ.எம்.ஓ) அமைப்பு அனுசரணையுடன் மியான்மாரில் இருந்து விசேட விமானம் மூலம் 142 ஆண்கள், ஒன்பது பெண்கள் உட்பட 151 பேர் கட்டுநாயக்காக விமான நிலையத்தை நேற்று (28) அதிகாலை 3 மணியளவில் வந்தடைந்தனர்.

இவ்வாறு நாடு திரும்பியவர்கள், வவுனியா, கொழும்பு, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள், சட்டவிரோத ஆள்கடத்தல் முகவர்கள் ஊடாக 3 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் டொலரை வழங்கி, விமான மூலம் மியான்மாருக்கு சட்டபூர்வமாக சென்றுள்ளனர். அங்கிருந்து கனடாவுக்கு படகில் சட்டவிரோதமாக பயணித்துள்ளதாக சிஐடியினரின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

# ருமேனியாவில் இலங்கையர்கள் சிக்கினர்

அதிலொரு டிரக்கில் எரித்திரியா, பங்களாதேஷ் பிரஜைகள் 17 பேர் இருந்துள்ளனர்

மற்றைய டிரக்கில் 11க்கும் மேற்பட்ட இலங்கையர்கள், பாகிஸ்தானியர்கள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் 21 முதல் 42 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது.

# மணல், கல், களிமண்ணுக்கு புதிய அனுமதிப்பத்திர முறை

சுற்றாடல் அமைச்சால் முன்னெடுக்கப்பட்ட விசேட கண்காணிப்பை அடுத்து, எதிர்வரும் 02ஆம் திகதி முதல் அனைத்து போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களிலும் வாகன இலக்கம், போக்குவரத்து பாதை உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

# 'டுபாய் சுத்தா'வுக்கு சரீரப் பிணை

விசாரணைக்குப் பின்னர் கைது செய்யப்பட்டார்.

நேற்று (28) கைது செய்யப்பட்ட அவர், கடுவளை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (28) மாலை ஆஜர்படுத்தப்பட்டார். அவரை, இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில்



விடுதலை செய்யுமாறு நீதவான் ஸ்ரீயாமினி விஜேபண்டார உத்தரவிட்டார்.

# அறிவார்ந்தவர்களுக்கு சிறைச்சாலை ஒரு பல்கலைக்கழகம்

"நான் நன்றாக இருந்தேன்; சிறைக்குள் ஓய்வெடுத்தேன். நடந்த சம்பவங்களால் எனது எதிர்காலம் பாதிக்கப்படும் என்று நான் நினைக்கவில்லை. சிறைக்குள் மிகவும் நிம்மதியாக இருந்தேன். எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது எப்படி என்று தெரியவில்லை. இது அறிவிக்கப்பட்ட அளவுக்கு தீவிரமானது அல்ல. சிறைச்சாலையில் நான் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது என்ன நடந்தது என்பது ஊடகங்களில் வெளியிடப்பட்டதைப் போல தீவிரமானது அல்ல.



பேசி தீர்த்துக் கொள்ளக்கூடிய பிரச்சினைகள் அவை. நான் ஏன் இவ்வளவு பிரபலமானேன் என்று எனக்குத் தெரியவில்லை. இவை இரண்டரை மாதங்களாக ஊடகங்களில் வெளிவந்தன. நான் செய்தவை, செய்யாதவை எல்லாம் ஊடகங்கள் மூலம் செய்திகளாக வெளியாகின. எனக்கு ஒரு பெரிய அநியாயம் நடந்தது. என்னுடன் பழகியவர்கள் என் மீது கோபமாக இருந்தால், அவர்கள் எனக்கு நல்லது சொல்ல மாட்டார்கள். எனது எதிர்காலம் பாதிக்கப்படவில்லை என்று நினைக்கிறேன். நிறைய அனுபவம் கிடைத்தது.

ஒரு நபராக, அனுபவம் எனது அறிவை அதிகரித்தது. அறிவார்ந்த மக்களுக்கு இது ஒரு நல்ல பல்கலைக்கழகம்" என்றார்.

# மின் உற்பத்தி கப்பல் மூலம் மின்சார கொள்வனவுக்கு முஸ்தீபு

மின் உற்பத்தி கப்பலில் இருந்து மின்சாரம் வாங்கினால் அதற்கு டொலரில் பணம் செலுத்த வேண்டும் என்றும், இதற்கு முன்பும் இதே முறையில் டொலர் கொடுத்து கப்பலில் இருந்து மின்சாரம் பெறும் முயற்சிகள் நடந்ததாகவும் நிலக்கரி தட்டுப்பாடு காரணமாக நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் ஓர் இயந்திரம் செயலிழந்துள்ளதாகவும், எதிர்வரும் நாள்களில் மற்றுமோர் இயந்திரம் செயலிழக்க நேரிடலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிலக்கரி தட்டுப்பாட்டுக்கு தீர்வாக திருகோணமலை துறைமுகத்திற்கு நிலக்கரியை கொண்டு வந்து அங்கிருந்து கன்டெய்னர் லொறிகள் மூலம் நுரைச்சோலைக்கு கொண்டு வர திட்டமிடப்பட்டு உள்ளதாகவும் பாரிய வர்த்தகர் ஒருவருக்கு போக்குவரத்து பணிகள் வழங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் இருந்து நுரைச்சோலைக்கு போக்குவரத்துக்கு அதிக பணம் செலவாகும் எனவும், அந்தப் பணத்தில் டீசல் அல்லது எரிபொருளை வாங்கி எரிபொருள் ஆலைகளை இயக்க முடியும் எனவும் ரஞ்சன் ஜெயலால் மேலும் தெரிவித்தார்.



# 497 கொலைகளுடன்...

இந்தக் காலப்பகுதியில் சொத்துகளுக்கு எதிரான 16 ஆயிரத்து 317 குற்றங்களும், நபர்களுக்கு எதிராக 5,964 குற்றங்களும் இழைக்கப்பட்டுள்ளன.

கடந்த 11 மாதங்களில் 1,466 வாகனத் திருட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் இவற்றில் பெரும்பாலானவை மோட்டார் சைக்கிள், ஓட்டோ திருட்டு சம்பவங்கள் எனவும், இதில் 39 சதவீதமானவை மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இந்தக் காலகட்டத்தில், 3,596 கடத்தல் வழக்குகள், 6,208 வீடுகள் உடைப்பு, 2,159 கொள்ளை வழக்குகள் பதிவாகியுள்ளன. 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2021ஆம் ஆண்டில் இலங்கையில் பாரிய குற்றச்செயல்களின் எண்ணிக்கை 4,336 ஆக அதிகரித்துள்ளது. 2020ஆம் ஆண்டில், 31 ஆயிரத்து 098 கடுமையான குற்றங்கள் பதிவாகியுள்ளன.

2021ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 35 ஆயிரத்து 434 ஆக அதிகரித்துள்ளது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியே குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# "புதிய படை உருவாகும்"

அழுத்தங்களின் ஊடாக, கொழும்பு அதிகாரம் உறுதியாக கைப்பற்றப்படும் என்றார்.

கடந்த வன்முறை சம்பவங்களில் அப்போதைய பிரதமராக பதவியில் இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீடு எரிக்கப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பிலான வாக்குமூலத்தைப் பதிவு செய்வதற்காக அவர் இரகசிய பொலிஸ் பிரிவுக்கு அழைக்கப்பட்டு, அவரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நேபாளப் பிரதமருக்கு பிரதமர் தினேஸ் வாழ்த்து



நேபாளத்தின் பிரதமராக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதையிட்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமர் என்ற வகையில் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதாக பிரதமர் தினேஸ் குணவர்தன தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஆழமான நட்புறவையும் நெருங்கிய உறவுகளையும் கொண்ட நெருக்கமான தெற்காசிய அயல் நாடுகளான இலங்கையும் நேபாளமும், இரு நாடுகளும் எதிர்கொள்ளும் தற்போதைய சவால்களை வெற்றிகொள்ளவும், ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகளை ஆராயவும் இணைந்து செயற்பட அர்ப்பணிப்புடன் உள்ளன எனவும் பிரதமர் தினேஸ் தெரிவித்துள்ளார்.

பகிர்ந்த சமய மற்றும் ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட வலுவான, நீண்டகால இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்த உங்களுடன் தொடர்ந்து பணியாற்ற தான் பெரிதும் எதிர்பார்த்துள்ளதாகவும், புதிய பதவிக் காலத்தில் நாட்டு மக்களின் நலன்களை உறுதிசெய்யும் அனைத்து முயற்சிகளும் முழுமையாக வெற்றிபெற வாழ்த்துவதாகவும் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்டணத்தை அதிகரித்தால்

# “துண்டிக்க செல்லோம்”

ஜனவரி 04ஆம் திகதி முதல் மீண்டும் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படுமாக இருந்தால், மின்சாரக் கட்டணத்தை செலுத்தாத பொதுமக்களின் வீடுகளின் மின்துண்டிப்புகளை மேற்கொள்ள மின்சாரசபையின் ஊழியர்கள் எவரும் செல்லப்போவதில்லை என மின்சாரத்துறை சேவை தொழிற்சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

ஜனவரி முதல் மின்சாரக் கட்டணத்தை மேலும் அதிகரிக்கப்போவதாக மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர அறிவித்திருப்பது, மக்கள் மீதுள்ள பாரிய கோபத்தினால் ஆகும் என்றார்.

மின்சாரசபை நட்டமடைந்தமைக்கு இந்நாட்டின் பொதுமக்களோ, மின்சாரசபையின் ஊழியர்களோ காரணமில்லை. முடிந்தால் ஜனவரி 04ஆம் திகதி மின்சாரக் கட்டணத்தை அதிகரித்துக் காட்டுங்கள் எனவும் அவர் சவால் விடுத்தார்.

இந்நாட்டில் 74 இலட்ச மின் பாவனையாளர்கள் இருக்கிறார்க்ள. மக்கள் பட்டினியில் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையிலும் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படுகிறது. அரசாங்கத்துக்கு சார்பானவர்களிடம் ஒன்றைக் கூறுகிறேன், மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டதன் பின்னர் மின்சாரக் கட்டணங்களை செலுத்தாத பொதுமக்களின் வீடுகளில் மின்துண்டிப்புகளை செய்வதற்கு மின்சார சபை ஊழியர்கள் எவரும் செல்லப்போவதில்லை என்றார்.

மக்களுக்கு மின்சாரக் கட்டணத்தை செலுத்த முடியவில்லை என்றால் நாம் எவ்வாறு அவர்களின் மின்சார இணைப்பை துண்டிப்பது? எனவும் கேள்வி எழுப்பிய அவர், மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகரவையும், அரசாங்கத்தையுமே மக்கள் தாக்க வேண்டும். மின்சார சபையின் ஊழியர்களை மக்கள் தாக்கினால் யார் பொறுப்புக்கூறுவது எனவும் கேள்வி எழுப்பினார்.



எனவே, மின் கட்டணங்களை செலுத்தாத பொதுமக்களின் வீடுகளுக்கு சென்று மின்சார இணைப்பை மின்சார சபையின் ஊழியர்கள் எவரும் துண்டிக்க மாட்டார்கள். இராணுவத்தைப் பயன்படுத்தியே மின்துண்டிப்புகளை மேற்கொள்ள வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

# ஜனவரி 09 வரை காலஅவகாசம் உள்ளது

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான திகதியை அறிவிப்பதற்கு ஜனவரி 09ஆம் திகதிவரையில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் காலஅவகாசம் இருப்பதாக தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, அவ்வாறு அறிவிக்கவில்லை என்றால், தேர்தலை நடத்த வேண்டுமென உயர்நீதிமன்ற உத்தரவிடும் நிலைமை ஏற்படும் என்றார்.



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதியை டிசெம்பர் மாத இறுதியில் அறிவிக்கப்போவதாக தேர்தல்கள் ஆணைக்குழு இம்மாதம் 08ஆம் திகதி அறிவித்திருந்தது. அப்படி என்றால் இன்றும் ஒரு சில நாட்கள் மாத்திரமே இருக்கின்றன என்றார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடத்தி உள்ளூராட்சி மன்றங்களை அமைப்பதற்கு ஜனவரி 09ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலுக்கான திகதி தேர்தல் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும். எனவே, தேர்தலுக்கான திகதியை அறிவிக்க, ஜனவரி 09ஆம் திகதி வரையில் காலஅவகாசம் இருக்கிறது. ஆனால் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு 14 - 17 நாட்களுக்குள் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றார்.

ஜனவரி 04 ஆம் திகதி தேர்தல் திகதி தொடர்பான அறிவிப்பு வெளிவருமாக இருந்தால் ஜனவரி 18ஆம் திகதியிலிருந்து 21ஆம் திகதி வரையில் வேட்புமனுக்களை தாக்கல் செய்ய முடியும். வேட்பு மனுக்கள் தாக்கல் செய்து 5 வாரங்களுக்குக் குறையாத 7 வாரங்களை விட கூடாதவாறு தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதன்படி மார்ச் மாதம் 11ஆம் திகதி முன்னர் நாட்டில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றார்.

வேட்புமனுக்களைப் பெற்றுக்கொண்டப் பின்னர் தேர்தலைக் காலந்தாழ்த்துவதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாக கூறுகிறார்கள். கடந்த முறை வேட்புமனுக்களைப் பெற்று தேர்தலை தேர்தல்கள் ஆணைக்குழுவே காலந்தாழ்த்தியது எனவும் தெரிவித்தார்.

தேர்தலை நடத்துவதற்கு சட்டப்படி நடந்துகொள்வோம் என உயர்நீதிமன்றத்துக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. சட்டத்தின் பிரகாரம் தேர்தலை நடத்த வேண்டுமாக இருந்தால் ஜனவரி 09ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கான திகதி அறிவிக்கப்பட வேண்டும் என்றார்.



## ஓய்வுபெறும் அதிபருக்குக் கௌரவிப்பு

தர்காநகர் களு/ முஸ்லிம் மகளிர் தேசியப் பாடசாலையின் அதிபராக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபர் ஏ.ஏ.எம்.பாயிஸ், இக்கல்லூரியின் கல்விப் பெறுபேறுகள் இணைப்பாடவிதான பௌதீக வள அபிவிருத்தி உட்பட இதன் சகல துறை வளர்ச்சிக்கு ஆற்றிய பணிக்காக கௌரவிக்கப்பட்டார்.



# முட்டைக்கே வழியில்லை தேர்தல் அவசியமா?



முட்டை ஒன்றைக்கூட வாங்குவதற்கு பணமில்லாது, நாட்டு மக்கள் தவிக்கும் இந்நிலைமையில் 10 பில்லியன் ரூபாய்களை செலவிட்டு உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமா என, தேசப்பற்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சுகத் ஹேவா பத்திரன கேள்வி எழுப்பியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலைக் காலந்தாழ்த்த வேண்டுமென தேசப்பற்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சுகத் ஹேவா பத்திரன தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், இந்த வார இறுதியில் அல்லது ஜனவரி மாதத்தின் இறுதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியாகலாமென கூறப்படுகிறது சுகத் ஹேவா பத்திரன தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு 10 பில்லியன்களை மத்திய வங்கியிடமிருந்து கோரியுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் கூறுகிறார். தனது பிள்ளைக்கு முட்டை ஒன்றை வாங்கிக்கொடுப்பதற்குக் கூட பணமில்லாது பெற்றோர்கள் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் தற்போது உள்ளூராட்சி மன்ற தேர்தல் அவசியமா? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

பொருளாதார நெருக்கடி நிலைமைகள் சரி செய்யப்பட்டப் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதில் பிரச்சினை இல்லை. அதுபோல தேர்தல் முறைமையிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியுமே அதிகம் பேசுகிறார்கள். தேர்தலுக்கு பயந்துள்ளமையே இதற்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.

# “பஸ் மேன்” விமர்சனங்களுக்கு அஞ்சமாட்டேன்

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து செலவுகளுக்காக பெற்றோர்கள் அதிக பணத்தை செலவிடுகிறார்கள். எனவே, பாடசாலைக்கு இலவசமாக பஸ் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு இதுவரை 50 பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக பாடசாலை மாணவர்களின் கல்விக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளுக்காக பெற்றோர்கள் செலவிடும் தொகை குறைவடையும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

‘பிரபஞ்சம்’வேலைத்திட்டத்தின் கீழ் 50 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான பாடசாலை பஸ் அ/தபுத்தேகம மத்திய கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர், பாடசாலையில் அரசியலுக்கு, வியாபாரத்துக்கு தொடர்புடைய முன்னாள் பழைய மாணவர்கள் சிலர் இருந்தாலும், அவர்கள் தங்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு எதுவும் செய்வதில்லை எனவும், பஸ்களை இலவசமாக வழங்கியதற்காக ‘பஸ் மேன்’ என்று அழைக்கப்பட்டாலும், அவதூறுகள் மற்றும் அவமானங்களை சிறிதும் பொருட்படுத்தவில்லை எனவும் தெரிவித்தார்.



மகாத்மா காந்தி கூறியது போல், வேலை செய்பவர்கள் மற்றும் வேலை செய்வதாக காட்டிக்கொள்பவர்கள் என இரண்டு குழுக்கள் உள்ளன. எனவே எத்தனை பேர் புள்ளிகளைப் பெற்றாலும் உழைக்கும் மக்களுடன் இணைந்து நின்று நாட்டுக்காக எதனையும் செய்யத் தயார. தற்போது எமது நாட்டுக்கு தேவைப்படுவது உழைக்கும் மக்களே. அந்த மக்களைக் கொண்டு நாட்டைக் கட்டியெழுப்ப தான் தயார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார்.




# ஓட்டோ–பஸ் விபத்தில் 7 வயது சிறுமி பலி

ராமு.தனராஜ்

பதுளை, கஹட்டரூப்ப பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பிட்டிய மல் சந்தியில் ஓட்டோவும், இலங்கை போக்குவரத்து சபை பதுளை டிப்போவுக்குச் சொந்தமான பஸ்ஸொன்றும் புதன்கிழமை (28) மோதி விபத்துக்குள்ளானதில் 7 வயது சிறுமி பலியாகியுள்ளார்.

கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே சிறுமி உயிரிழந்துள்ளார். அச்சிறுமியின் தாய் உட்பட மூவர் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓட்டோவை பெண்ணொருவரே செலுத்திச் சென்றுள்ளார்.

கஹட்டரூப்பயில் இருந்து பதுளை நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸும், அம்பிட்டியவில் இருந்து முத்துமாலை பகுதிக்கு சென்று கொண்டிருந்த ஓட்டோவுமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் மரணித்த சிறுமி, முத்துமாலை கொவிபொல கெந்தகொல்ல பகுதியைச் சேர்ந்தவர் என்பதோடு பஸ்ஸின் சாரதி கஹட்டரூப்ப பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

# கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான அவசியமில்லை என தெரிவிக்கும் இலங்கை மின்சார பொது ஊழியர் சங்கம் தலைவர் மாலக விக்ரமசிங்க, அடுத்த வருடம் மின்சாரப் பயன்பாடு மேலும் குறையும் எனவும் தெரிவித்தார்.

காலியில் நேற்று (28) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், மின்சாரக் கட்டணத்தை இப்போது அதிகரிக்க வேண்டிய அவசியம் கிடையாது. மின்சார சபையில் மாபியா செயற்படுகிறது. இதன் பின்னணியில் ஊழல் மோசடியான அரசியல்வாதிகள், அரச ஊழியர்கள் என பலர் இருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு நாடுமுழுவதிலும் தொடர்ந்து மின்சாரத்தை வழங்க வேண்டுமாக இருந்தால் 47 ஜிகாவோட் தேவை என இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர்கள் சங்கம் அறிக்கை ஒன்றை அமைச்சருக்கு வழங்கியுள்ளது. உண்மையில் நாட்டின் மின்சார தேவை 40 ஜிகாவோட்டை விடக் குறைவாகவே காணப்படுகிறது எனவும் தெரிவித்தார்.

இவர்கள் கூறுவதை வைத்துப் பார்க்கும்போது இலங்கை பொருளாதார வளர்ச்சி அடுத்த வருடம் நூற்றுக்கு 20 சதவீதமாக ஒரேயடியாக அதிகரிக்க வேண்டும். ஆனால் அடுத்த வருடம் பொருளாதார வளர்ச்சி மேலும் வீழ்ச்சியை நோக்கியே பயணிக்கப்போகிறது.

# யானையுடன் பயணிப்பதில் பிரச்சினை இல்லை



ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பயணிப்பதில் எந்தவிதமானப் பிரச்சினைகளும் இல்லை என தெரிவிக்கும் மொட்டுக் கட்சியின் எம்.பியும் வீதி அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சருமான தேனுக விதானகமகே, நாட்டின் தற்போதையப் பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பலப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினருக்கு கிராமங்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுவிட்டதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கிறார். எமக்கு அப்படி ஒரு பிரச்சினையும் ஏற்படவில்லை. நாம் கிராமங்களுக்கு சென்று கட்சி உறுப்பினர்களை சந்தித்து வருகிறோம் எனவும் தெரிவித்தார்.

தாங்களே இந்நாட்டின் ஜனாதிபதியென ஜே.வி.பியினர் நினைத்துகொண்டிருக்கிறார்கள். உள்ளூராட்சி மன்ற தேர்தலை வென்று விடலாம் என அவர்கள் நினைக்கிறார்கள். மக்கள் என்ன பதில் சொல்கிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் எனவும் தெரிவித்தார்.

எங்களது ஜனாதிபதியை (கோட்டாபய ராஜபக்ஷவை) நாங்கள் இழந்துவிட்டோம் என்பதால் எமக்கு எந்தவிதமானப் பிரச்சினைகளும் இல்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் ஆணையோடு ஜனாதிபதியாக்கி அரசாங்கத்தை பலப்படுத்தியுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதையப் பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமாக இருந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பலப்படுத்த வேண்டும். அதனையே நாம் செய்துகொண்டிருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின்

# வரலாற்றுச் சாதனை

## 2022இல் 510 பிரசவங்கள்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில், 2022ஆம் ஆண்டில் இதுவரைக்கும் 510 பிரசவங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையைப் பொறுத்தவரைக்கும் இது வரலாற்று சாதனை எனவும் வைத்தியாசலையின் அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ்.எம் ஜாபீர் தெரிவித்தார்.

இதனடிப்படையில், 2022 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 28ஆம் திகதி இது வரைக்கும் 510 பிரசவங்கள் நிகழ்ந்துள்ளன. இதில் 508 சுகப்பிரசவங்களும் இரண்டு குழந்தைகள் மரணித்தும் பிறந்துள்ளன.

நாவிதன்வெளி, திருக்கோவில்

# பிரதேச செயலகங்களுக்கு விருது

■ வி.ரி சகாதேவராஜா



அம்பாறை மாவட்டத்தில் நாவிதன்வெளி, திருக்கோவில் ஆகிய பிரதேச செயலகங்கள் தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளன. இதற்கான விருது வழங்கும் நிகழ்வு, அலரி மாளிகையில் வியாழக்கிழமை (15) இடம்பெற்றிருந்தது.

பிரதேச செயலகத்தினூடாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளும் இலத்திரனியல் நுட்பங்களை உட்புகுத்தி விரைவான சேவையை வழங்குகின்ற ஆற்றலும் பிரதானமாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

மேலும், அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் இதுவரையில் பெறப்பட்ட அதிகூடிய அடைவுமட்டம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐஸ் போதை பொருள் வைத்திருந்த முதியவருக்கு

# ஒருவருட சிறை; 10 ஆயிரம் ரூபாய் அபராதம்

■ கனகராசா சரவணன்

ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 70 வயதுடைய முதியவருக்கு ஒருவருட சிறைத்தண்டனை விதித்து 10 ஆயிரம் ரூபாய் அபதாரம் செலுத்துமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம் ஹம்சா நேற்று முன்தினம் (27) உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

அட்டாளைச்சேனை பகுதியைச் சேர்ந்த 70 வயதுடைய முதியவர் மூன்று மாதங்களுக்கு முன்னர், ஒன்பது கிராமும் 850 மில்லி கிராமும் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டு, மூன்று மாதகாலமாக விளக்கமறியலில் வைக்கப்படடார்.

இதைத் தொடர்ந்து கடந்த முறை காணொளி மூலமாக, அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுப் பத்திரம் வாசித்துக் காண்பிக்கப்பட்டதுடன் குறித்த குற்றச்சாட்டை குற்றவாளி ஏற்றுக் கொண்டதை அடுத்து, அவரது அடையாள மற்றும் தண்டனைத் தீர்ப்புக்காக செவ்வாய்கிழமை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது அவருக்கு ஒருவருட சிறைத் தண்டனை விதித்து முதல் ஆறு மாத கடுழிய சிறைத்தண்டனையும் மிகுதி ஆறு மாத கால சிறைத் தண்டனையும் ஏழு வருட காலத்துக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் 10 ஆயிரம் ரூபாய் அபதாரமாகச் செலுத்துமாறு நீதவான் தீர்ப்பளித்தார்.



**அதிபருக்கு கௌரவம்...**
37 வருடகால கல்விச் சேவையில் இருந்து ஓய்வுபெறும் அதிபர் க. பேரின்பநாதனை கௌரவிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை (22) பட்டித்திடல் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதன்போது அதிபர் மாலை அணிவித்து பான்ட் வாத்தியக் குழுவினரால் அழைத்துவரப்பட்டு, பொன்னாடைபோர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். தமிழ்பாட உதவிக் கல்வி பணிப்பாளர் ஜனாப் எம்.எம்.பி காஜாமுகைதீனால் 'பேரின்பம்' சிறப்புமலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# புளுகுநாவைக்குளம் புனரமைப்பு

■ வி.ரி சகாதேவராஜா

கொக்கட்டிச்சோலை, தாந்தாமலைப் பகுதியிலுள்ள புளுகுநாவைக்குளம், கங்காணியார்குளம் ஆகிய நீர்ப்பாசன குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இவ்விரு குளங்களினது புனரமைப்பால் சுமார் ஏழாயிம் ஏக்கர் வயல் காணிகள் பயன்பெறுகின்றன. இதனால் மட்டு. மாவட்ட நெல் உற்பத்தியும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி திட்டங்களுக்கான நிதிகளைப் பெறும் வழிகளைக்கண்டுபிடித்து, செயற்படுத்தி வருகின்ற மாகாண பிரதிநீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி எஸ். இராஜகோபாலசிங்கம், பட்டிருப்புப்பிரிவு நீர்ப்பாசனப்பொறியியலாளர் எந்திரி கே. சுபாகரன் ஆகியோர் பாராட்டப்பட்டு வருகின்றனர்.





கொரோனாவால் மரணித்தவர்களின்

# மஜ்மா நகர் மையவாடியில் சிரமதானம்

■ எம்.எம் அஹமட் அனாம்

ஓட்டமாவடி, மஜ்மா நகர் கொவிட் மையவாடி சிரமதானப் பணி, கட்டம் கட்டமாக இரு வாரங்களாக இடம்பெற்று வருகின்றது. இதன் அடிப்படையில் இரண்டாவது முறையாகவும், மஜ்மா நகர் கிராம மக்களால் நேற்று முன்தினம் (27) துப்புரவு செய்யப்பட்டது.

கோறளை பற்று மேற்கு பிரதேச செயலாளர் வி. தவராஜாவின் வேண்டுகோளுக்கு அமைவாக, மஜ்மா நகர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் கொரோனாவால் மரணித்தவர்களின் ஜனாஷாக்கள் அடக்கம் செய்யப்பட்ட இடம் துப்புரவு செய்யப்பட்டது.

# கசிப்பு உற்பத்தி தகவலாளிகளின் வீடுகள் மீது தாக்குதல்

## வாள், கத்தி, பொல்லுகளுடன் வந்த குழு கைவரிசை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முட்கொம்பன் கிராமத்தில் இடம்பெறும் கசிப்பு உற்பத்தி, விற்பனை தொடர்பில், பொலிஸாருக்கு தகவல் வழங்கியதாக கூறி, திங்கட்கிழமை (26) இரவு வாள், கத்தி, பொல்லுகளுடன் வந்த 15க்கும் மேற்பட்டோர், இரண்டு வீடுகளையும் வீட்டிலுள்ள பொருட்களையும் சேதமாக்கியுள்ளனர்.

முட்கொம்பன் கிராமத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கசிப்பு உற்பத்தி, விற்பனைகளால் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படுவது தொடர்பிலும் இதைக் கட்டுப்படுத்துமாறு கோரியும் வடக்கு மாகாண ஆளுநர், மாவட்ட அரச அதிபர், பொலிஸ் உயர்பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு கிராமமட்ட அமைப்புகளால் மகஜர்கள் கையளிக்கப்பட்டு இருக்கின்ற நிலையில், கசிப்பு உற்பத்தி குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியதாகத் தெரிவித்து, வாள்கள், கத்தி, தடிகள் என்பவற்றுடன் மோட்டார் சைக்கிள்களில் வந்த 15 க்கும் மேற்பட்டோர், இரண்டு வீடுகள் மீது தாக்குதல் மேற்கொண்டதுடன் வீட்டில் இருந்த பெருமதியான பொருட்களையும் சேதப் படுத்தியுள்ளனர். இதன்போது வீட்டில் இருந்தவர்கள், அயலவர்களின் வீடுகளில் பாதுகாப்பு தேடி ஓடியிருந்தனர்.

அக்கராயன் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து உள்ளனர்.

# அதிகளவான ஹெரோயின் போதை ஊசியை ஏற்றிய நபர் உயிரிழப்பு

■ செந்தூரன் பிரதீபன்

அதிகளவான ஹீரோயின் போதை ஊசியை எடுத்துக் கொண்ட இளைஞன் உயிரிழந்த சம்பவம் நேற்று (28) மாலை இடம் பெற்றுள்ளது.

தலங்காவில் பிள்ளையார் கோவில் திருநெல்வேலி பகுதியை சேர்ந்த 25 வயதான கிறிஸ்டி சதீஷ்குமார் டனிஷ்ரன் என்ற இளைஞனே உயிர் இழந்துள்ளார்.

இவர் நேற்று மாலை நான்கு நண்பர்களுடன் ஒன்றாக சேர்ந்து ஹெரோயின் ஏற்றியுள்ளார். நான்காவதாக இவர் ஊசியினை பரிமாற்றி ஏற்றிக் கொண்ட பொழுது, நரம்பு ஊடாக காற்றின் அழுத்தம் அதிகரித்துள்ளது. அத்துடன் அவர் சுவாச பிரச்சினைக்கு உள்ளாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.



**விழிப்புணர்வு தெருநாடகம்...**
கிளிநொச்சி மாவட்ட செயலகம், மாவட்ட வைத்திய அதிகாரிகள் இணைந்து, போதைப்பொருள் பாவனையில் இருந்து மக்களை விடுவிக்கும் வகையில் அமைந்த, சுயாதீன அரங்கச் செயற்பாட்டாளர்களால் அரங்காற்றுகை செய்யப்பட்ட தெருநாடகம் நேற்று (28) பண்ணங்கண்டி கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தின் சகல கிராமங்களிலும் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், குறித்த தெருநாடகம் கிராமங்கள் தோறும் காட்சிப்படுத்தப்பட உள்ளது.
சுப்பிரமணியம் பாஸ்கரன்

# யாழ். பல்கலைக்கழகத்தில் திருவெம்பாவை

■ கே. நடராஜ்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவின் வழிகாட்டலில், பல்கலைக்கழக மாணவர்களால் மூன்றாவது வருடமாகவும் திருவெம்பாவை பாராயணம் நேற்று (28) திருவெம்பாவை விரதத்தின் முதலாம் நாளில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரா கோவில் முன்றலில் இருந்து ஆரம்பமான திருவெம்பாவை பாராயணம், இராமநாதன் வீதியூடாக கலட்டி சந்தியை அடைந்து, பாலசிங்கம் விடுதி ஊடாக தபால் பெட்டி சந்தி, பரமேஸ்வரா சந்தியை அடைந்து மீண்டும் பரமேஸ்வரா முன்றலில் பாராயணம் முடிவுற்றது.

இதன்பொழுது, குறித்த பகுதிகளில் உள்ள கோவில்களையும் தரிசித்த வண்ணம் பாராயணம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும், ஜனவரி ஐந்தாம் திகதி திருவெம்பாவையை முன்னிட்டு, கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் மார்கழி பெருவிழா முன்னெடுக்கப்படவுள்ளது.

அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு முன்னால்

# தனியார் பஸ்கள் பணிப் புறக்கணிப்பு

■ செந்தூரன் பிரதீபன்



அச்சுவேலி தனியார் பஸ் சாரதியையும் நடத்துநரையும் விசாரணைக்காக பொலிஸார் அழைத்து சென்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தனியார் பஸ் உரிமையாளர்கள், அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் தமது பஸ்களை நிறுத்திவைத்து, ஒரு மணி நேரம் பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

நேற்று (29) காலை யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த 750 இலக்க வழித்தட பஸ் சாரதியை, அச்சுவேலி பஸ் நிலையத்தில் நின்ற ஒருவர் தாக்கியுள்ளார். இதையடுத்து, குறித்த அரச பஸ், பொலிஸ் நிலையம் எடுத்து செல்லப்பட்டு, பாதிக்கப்பட்ட சாரதி அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்தார்.

முறைப்பாட்டுக்கு அமைய, தனியார் பஸ்ஸின் சாரதியையும் நடத்துநரையும் அச்சுவேலி பொலிஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரபாத் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், குறித்த நபர்கள் விடுவிக்கப்பட்டனர். இதையடுத்து தனியார் பஸ் சேவைகள் வழமைக்குத் திரும்பின.

பருத்தித்துறை நகர சபை தவிசாளர் தெரிவு

# கோரம் இன்மையால் ஒத்திவைப்பு

■ எஸ். தில்லைநாதன்

பருத்தித்துறை நகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் கடந்த ஐந்தாம் திகதி சமர்பிக்கப்பட்ட வேளை, ஒரு மேலதிக வாக்கால் தோற்கடிக்கப்பட்டது. இந்நிலையில், 19ஆம் திகதி மீண்டும் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை, சிறிது நேரத்துக்கு முன்னராக தவிசாளர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று (28) உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ. பிரணவநாதன் தலைமையில் புதிய தவிசாளர் தெரிவு இடம்பெறுவதற்கான கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

15 உறுப்பினர்களை கொண்ட பருத்தித்துறை நகர சபையில், குறைந்தது எட்டுப் பேர் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு சமூகமளிக்க வேண்டும். ஆனால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த முன்னாள் தவிசாளர் உட்பட ஐவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவரும் சுயேட்சை குழு உறுப்பினர் ஒருவருமாக ஏழு பேர் சமூகமளித்தனர்.

எனவே, ஒரு கோரம் இன்மையால் தவிசாளர் தெரிவு ஒத்திவைக்கப்பட்டு உள்ளதாக, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்ததுடன் பிறிதொரு திகதி அறிவிக்கப்படும் என்று கூட்டம் முடிவுறுத்தப்பட்டது.

நேற்றைய தவிசாளர் தெரிவில், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள் அறுவரும், ஈழமக்கள் ஜனாநாயக கட்சி உறுப்பினர்கள் இருவருமாக எட்டுப் பேர் சமூகமளிக்கவில்லை.



# நுவரெலியா சதொசவில் சொப்பின் நிபந்தனை

ஆ.ரமேஸ், எஸ். கே. குமார்

2024 ஆண்டு பிறப்பதற்கு இன்னும் ஒரிரு நாட்கள் இருக்கும் நிலையில், அதனை வரவேற்று, கொண்டாடுவதற்காக மக்கள் தயாராகிவருகின்றனர். பெரும்பாலானவர்கள் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதிலேயே அதிகம் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இந்நிலையில், நுவரெலியா, லோசன் வீதியிலுள்ள லங்கா சதொசவில் உணவுப்பொருட்கள் மற்றும்



அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்ய வரும் நுகர்வோர்களுக்கு சதொச நிலைய முகாமையாளர் சில நிபந்தனைகளை விதித்துள்ளார் என அறியமுடிகின்றது.

பொருட்களை பொதியிட்டுவதற்கான சொப்பின் பைக்கு, தட்டுப்பாடு நிலவுவதால் சொப்பின் அல்லது கை பைகளுடன் வரும் நுகர்வோருக்கு மட்டுமே பொருட்கள் விற்பனைச் செய்யப்படுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சொப்பின் அல்லது கைப்பைகளை கொண்டுச் செல்லாதவர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர் என பாதிக்கப்பட்ட நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சதொச விற்பனை நிலையங்களில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் ஓரளவுக்கு குறைக்கப்பட்டு விற்பனைச் செய்யப்படுகின்றன. அதனால், நுகர்வோர் அங்கு படையெடுக்க தொடங்கிவிட்டனர்.

இந்த நிலையில் அத்தியாவசிய பொருட்களை தட்டுப்பாடு இன்றி கொள்வனவு செய்யவும், அப்பொருட்களை பொதியிட்டு கொண்டு செல்லவும் நிபந்தனைகள் விதித்துள்ளமையினால் பாரிய அசௌகரிகங்களுக்கு தாம் முகம் கொடுப்பதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

# 5ஆவது மாத பயணத்தில் சமூக சமையலறை

செ.தி.பெருமாள்.

ACT FOUNDATION ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக சமையலறை நாட்டின் பல பகுதிகளில் இயங்கி வருகின்றது. மலையகத்திலும் தன் சேவையை ஆரம்பித்து செயற்படுத்துகின்றது.

ஐந்து மாதங்களாக இயங்கி வரும் இச்சமூக சமையலறையில் தினந்தோறும் சராசரியாக 200 க்கும் மேற்பட்டவர்களுக்கான மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகின்றது.



பண்டாரவளையை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் ஊடாக 13,000க்கும் மேற்பட்டோருக்கு பகலுணவு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

கொட்டகலை பகுதியில் அறநெறி பாடசாலை மற்றும் மாங்குளம், பண்டாரவளையில் வருமானம் குறைந்தவர்கள், முதியோர், விதவைகள் என அனைவரும் இச்சமூக சமையலறையின் மூலம் பயனடைகின்றதோடு தொடர்ந்தும் எமது நாட்டில் இன்னும் சில பகுதிகளில் ACT FOUNDATION ஊடாக சமூக சமையலறையை ஆரம்பிக்க உத்தே சிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பி டத்தக்கது.

# கலபிட்டகந்த த.ம.வி 3 போட்டிகளில் வெற்றி



நடராஜா மலர்வேந்தன்

அநுராதபுரத்தில் நடைபெற்ற அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டியில், தனி வாத்திய இசை போட்டியில் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களையும், தனி இசை போட்டியில் மூன்றாம் இடத்தையும் பண்டாரவளை கல்வி வலயத்துக்கு உட்பட்ட கலபிட்டகந்த தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் நெறியாள்கை செய்து வழிப்படுத்திய ஆசிரியை திருமதி. சரிதா சிவக்குமார் உள்ளிட்ட ஆசிரியர்களுக்கும் பண்டாரவளை வலய கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர், பெற்றோர்கள், பாடசாலை சமூகத்தினர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

# “தெகிகலை த.வியை மூடிவிடவேண்டாம்”

எம். செல்வராஜா



மொனராகலை மாவட்டத்தின் மெதகமை கல்வி வலயத்தில் அமைந்துள்ள தெகிகலை தமிழ் வித்தியாலயத்தை மூடிவிடாமல், வித்தியாலயத்தில் நிலவும் அனைத்து குறைபாடுகளையும் நிவர்த்தி செய்து, தரம் 8 வரையில் வகுப்புக்களை ஆரம்பித்து, செயல்படுத்தும்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார், ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றிலேயே, மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

‘ஊவா மாகாணத்திலேயே, மிகவும் பின் தங்கிய பாடசாலையாக இந்த வித்தியாலயம் காணப்படுகின்றது. இப்பாடசாலையில் தரம் 1 முதல் ஆண்டு 7 வரையிலான வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. 31 மாணவர்கள் கல்விக் கற்று வருகின்றனர். அதிபர் உள்ளிட்டு 5 ஆசிரியர்கள் கடமையிலுள்ளனர்.

இப்பாடசாலையை சூழவுள்ள பிரதேசமும் பின் தங்கிய நிலையில் காணப்படுவதால், அப்பிரதேச மக்கள் பொருளாதார நெருக்கடிக்கடியை பெருமளவில் எதிர்கொள்கின்றனர். இந்நிலையிலும் தம் பிள்ளைகளை கல்வி கற்க இப்பாடசாலைக்கு அனுப்புகின்றனர்.

இப்பாடசாலையில் தரம் எட்டு வரை வகுப்புக்களை ஆரம்பிப்பதுடன், ஆரம்பக் கல்வி பிரிவிற்கு 3 ஆசிரியர்களும், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு தலா ஒவ்வொரு ஆசிரியராக மூன்று ஆசிரியர்களுமாக, மேலும் ஆறு ஆசிரியர்களை நியமிக்கவும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

# தங்கமலையில் நத்தார் நிகழ்வு





ஹப்புத்தளை, தங்கமலை தோட்ட ஈகல் வின்ஸ் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நத்தார் நிகழ்வுகள், பங்குத் தந்தை நிலந்த பீரிஸ் தலைமையில் புதன்கிழமை (28) இடம்பெற்றன.

தோட்ட சிறுவர் நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவருக்கு,ஹப்புத்தளை உறுப்பினர்களான கலை சகாதேவன், மகேந்திரன் தோட்டக்கமிட்டி தலைவர் அர்ஜுன், ஆலய பங்குத் தந்தை போன்றோர் பரிசில்கள் வழங்கி வைத்தனர்.

# ஆர்வமிருந்தால் விண்ணப்பியுங்கள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் உடன் விண்ணப்பிக்குமாறு இலங்கை சம சமாஜ கட்சியின் ஊவா மாகாண தலைவரும்,கட்சியின் பிரதான அமைப்பாளரும் பண்டாரவளை ஸ்ரீ பத்திர காளியம்மான் தேவஸ்தான பிரதானி பாண்டவர் ஜோதிஷ்டதிபதி கலாநிதி ஷர்மா கேட்டுக்கொண்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட விரும்பும் சமூக ஆர்வலர்கள்,சமூக தொண்டர்கள், இலக்கியவாதிகள், கலைஞர்கள், தோட்டத் தலைவர்கள், தலைவிகள், மதப் போதகர்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் எந்தவித இன மத வேறுபாடின்றி விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் கிடைத்ததன் பின்னர், நேர்முகப் பரீட்சையும் தேர்வும்இடம்பெறவுள்ளது. விண்ணப்பங்களை தலைவர். இலங்கை சம சமாஜ கட்சி கிளைக் காரியாலயம்,இல.18.A சேனாநாயக்க மாவத்தை, பண்டாரவளை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# கடமைகளை பொறுப்பேற்றார்

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பொலிஸ் நிலையத்துக்கு பொறுப்பதிகாரியாக இடமாற்றப்பட்டுள்ள, மன்னார்,ர் சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய அதிகாரி சி.எஸ்.புஸ்பகுமார, தனது கடமைகளை நேற்று (28) காலையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மஸ்கெலியா பௌத்த விஹாரையின் தேரர், மஸ்கெலியா இந்து ஆலய பூசகர் ஆகியோர் சமய நிகழ்வுகளை மேற்கொண்டனர்.

மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக கடமையாற்றிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யசரத்ன பண்டார, நிக்கவரெட்டிய அப்பன் பொல பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுமி துஷ்பிரயோகம்: சிப்பாயுடன் மூவர் கைது

சுமணசிறி குணதிலக்க

மொனராகலை, எத்திமலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொடியாகலயை வசிப்பிடமாகக் கொண்ட 11 வயதான சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினர் என்றக் குற்றச்சாட்டின் கீழ் இராணுவ சிப்பாய் உள்ளிட்ட இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாவலர்களிடம் இருந்து கடத்திச் சென்று, இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் கீழ், செவ்வாய்க்கிழமை (27) இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமும், சிறுமியிடமும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அச்சிறுமி, இராணுவ சிப்பாயினால், ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அனைவரையும் சியம்பலாண்டுவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என தெரிவித்த எத்திமலை பொலிஸார், வைத்திய பரிசோதனைகளுக்காக மொனராகலை மாவட்ட வைத்தியசாலையில் சிறுமி அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றனர்.

# 23 வருடங்களின் பின்னர் ரயிலில் வருகிறது மரக்கறி

ரஞ்சித் ராஜபக்ஷ

கொழும்பு, கோட்டைக்கு ரயில்களின் ஊடாக மரக்கறிகளை கொண்டுவரும் செயற்பாடுகள் 23 வருடங்களின் பின்னர் செவ்வாய்க்கிழமை (27) ஆரம்பிக்கப்பட்டது.

இந்த திட்டத்தை அகில இலங்கை பொருளாதார மத்திய நிலைய சங்கம், நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில், முன்வைத்த இடைக்கால வரவு- செலவுத் திட்ட யோசனையின் ஊடாக, ரயில் திணைக்களத்தின் விற்பனை மற்றும் விநியோக பிரிவின் ஊடாக, ரயில்களில் மரக்கறிகளை ஏற்றி இறக்குவதற்கு விசேட கூடங்கள் நிர்மாணிக்கப்பட்டன.

அதனடிப்படையிலேயே, நானுஓயா ரயில் நிலையத்தில் இருந்து தனது முதலாவது பயணம், செவ்வாய்க்கிழமை (27) மாலை 5 மணிக்கு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள சுப்பர் மார்க்கெட் மற்றும் மெனிங் சந்தைக்கு தேவையான மரக்கறி சரக்குகள் அந்த ரயிலில் கொண்டு செல்லப்பட்டாலும், அந்த ரயிலில் பயணிகள், பயணிக்க வாய்ப்பில்லை என ரயில்வே திணைக்களத்தின் வர்த்தக மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் திரு.அசங்க சமரசிஹா தெரிவித்தார்.

இதன்மூலம் நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும் எனவும், இத்திட்டத்தின் குறைபாடுகளை ஆராய்ந்து அடுத்த வருடம் முதல் மாதம் முதல் ரயில் சேவை தொடரும் எனவும் பிரதி ஆணையாளர் தெரிவித்தார்.

மலையகப் பகுதிகளில் விளையும் காய்கறிகள், பூக்கள் மற்றும் பழங்கள் நுவரெலியாவைத் தவிர, பண்டாரவளை மற்றும் வெலிமடை பகுதிகளில் விளைவிக்கப்படும் மரக்கறிகள், பழங்கள் மற்றும் பூக்கள், நானுஓயா ரயில் நிலையத்தில் இருந்து கொண்டு செல்ல எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து ரயில் நிலையங்களுக்கும் இந்த ரயிலின் ஊடாக, பூக்கள் மற்றும் மரக்கறிகளை கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என நானுஓயா ரயில் நிலையத்தின் நிலைய அதிபர் ஜனக விரசிங்க தெரிவித்தார்.







# நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த துரிதமாக செயற்படுவது அவசியம்

ஒன்று விலகிச்சென்றால் இன்னொன்று பின்னாலேயே துரத்திக்கொண்டு வருவதைப் போல, அடுத்ததாக, டெங்கு நுளம்பின் பெருக்கமும், டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கையும் மரணிப்போரின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் புள்ளிவிவர தகவல்களின் பிரகாரம், டிசெம்பர் 27ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், டெங்கு நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 61 ஆயிரத்து 773 ஆகும். கொழும்பு மாவட்டத்திலேயே ஆகக்கூடுதலாக 12,618 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்துக்கு அடுத்தப்படியாக கம்பஹா மாவட்டத்தில் இதுவரையிலான காலப்பகுதியில் 8,924 பேரும், 5,356 பேர் கண்டி மாவட்டத்திலும் பதிவாகியுள்ளனர். ஆகக் குறைந்த எண்ணிக்கையான 67 பேர் முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர் என அந்தத் தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்கூட்டிய திட்டமிடல், விழிப்புணர்வு, தயார்படுத்தல் உள்ளிட்டவை இன்மையால், ஒவ்வொன்றையும் மீண்டும், மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது. நம்மைச் சுற்றியும், நமது சூழலையும் சுத்தமாக வைத்துக்கொண்டோமெனில், இவ்வாறான நோய்த்தாக்கங்களில் இருந்து விலகிச்சென்றுவிடலாம்.

நமது வீடுகளில் சேரும் குப்பைகள், சூழலுக்கு வீசியெறிப்படும் குப்பைகள் என்பவற்றை வகைப்பிரித்தாலேயே இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்காது ஓரளவுக்கு தப்பித்துக்கொள்ளலாம். எனினும், நோய்த்தாக்கம் அதிகரித்ததன் பின்னர்தான், சுத்தம் செய்தலும் புகைவிசிறும் நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்படுகிறது. அதற்குள் டெங்கு காய்ச்சல் பரவி, உயிர்களைப் பறித்துவிடும்.

மழை, வெள்ள அனர்த்தங்களுக்குப் பின்னர், டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கும். கடந்தகால அனுபவங்களின் ஊடாக, இதுதொடர்பில் போதியளவான அறிவு எங்களிடத்தில் இருக்கின்றது. ஆகையால், மழைக்காலத்துக்கு முன்னரே, முன்னெச்சரிக்கையாக இருந்தோமெனில், நுளம்பு பெருக்கம் ஏற்பட்டிருக்காது.

நாட்டில் பெரும்பாலான மருந்துகளுக்கு தட்டுப்பாடு இன்னுமே நிலவுகின்றது. அத்துடன் தலைதூக்கமுடியாத அளவுக்கு விலைகளும் எகிறி நிற்கின்றன. இந்நிலையில், நமது கண்முன்னே, உயிர்க்கொல்லியாக இருக்கும் டெங்கு நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும் முற்றாக இல்லாதொழிக்கவும் ஒவ்வொருவரும் அர்ப்பணித்தே ஆகவேண்டும். இல்லையேல், தேவையான அளவுக்கு மருந்தை எடுத்துக்கொள்ளமுடியாது, பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும்.

அதேபோல, நம்மை சுற்றியிருப்பவர்களுக்கு சூழல் சுத்தம் தொடர்பில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவேண்டும். குப்பைகளை வகைப்பிரித்து வெளியேற்றுவதற்கு சொல்லிக்கொடுக்கவேண்டும். அதனை முழு சமூகமும் கடைப்பிடித்து, ஏனையோருக்கு முன்மாதிரியாகத் திகழவேண்டும். நமது வீடும், சூழலும் சுத்தமாக இருக்கிறது. நமக்கென்ன என நினைத்தால், டெங்கு நுளம்புகள் அழையா விருந்தாளிகளாக நமது வீடுகளுக்குள்ளும் புகுந்து, நோயை தந்துவிட்டுச் செல்லும் நிலைமையே ஏற்படும்.

வந்தபின்னர் வைத்தியம் பார்ப்பதை விடவும், வருமுன் காப்பதே சிறந்தது. அதற்கு தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் சுற்றுச்சூழலை வைத்திருப்போருக்கு எதிரான தண்டப்பணம் அதிகரிக்கப்படவேண்டும். இல்லையேல் நிலைமை இன்னுமின்னும் மோசமடையும் என்பதை நினைவூட்டுகின்றோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

தீயவர்கள் உங்களைப் புகழ்ந்தால் எச்சரிக்கையாக இருங்கள். அவர்களிடம் உண்மைத் தன்மை இல்லை. காரணம் இல்லாமல் எதையும் செய்யமாட்டார்கள்.

ஒருவருக்கு சின்ன உதவி செய்தாலும், பதிலுக்கு அவரிடம் இருந்து எதைப் பிடுங்கலாம் என எண்ணும் சுபாவம் தாராளமாக இவர்களுக்கு உண்டு.

அரசியல்வாதிகளில் சிலர், தேர்தலில் ஏழைஎளியவர்களை ஏமாற்றி, நல்ல வார்த்தைகளை அள்ளி வீசுவார்கள். ஏன் கைலஞ்சமும் வலிந்து கொடுப்பார்கள். தேர்தலில் வெற்றிபெற்றால், தங்கள் சொந்த ஊர்ப்பக்கமே திரும்பிப்பார்க்க மாட்டார்கள். மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறந்துவிடும்.

மீண்டும் தேர்தல் வரும்போது, அதே பல்லவியைப் பாடுவார்கள். மக்கள் மீண்டும் நம்புவார்கள். இவை முடிவே இல்லாத பயணம்.

காரியவாதிகள் சுயநலம் கொண்டால், அவர்கள் பிறந்த நாட்டுக்கும் பிரயோசனம் அற்றவர்கள். எதிலும் எச்சரிக்கையுடன் இல்லாத மக்கள், ஏமாற்றங்களையே சந்திக்கிறார்கள்.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

தமிழ்க் கட்சிகள்

# தமிழ் மக்களைத் தோற்கடிக்கக் கூடாது



புருஜோத்தமன் தங்கமயில்

அமையும் சந்தர்ப்பங்களை வெற்றிகரமாகக் கையாளும் சமூகமே, அரசியல் வெற்றியை சுவைக்கும்; இலக்குகளை அடையும். மாறாக, அமையும் சந்தர்ப்பங்களை கையாளத் தெரியாமல், தொடர்ச்சியாகப் பின்னடைவைச் சந்திக்கும் சமூகம், பெரும் தோல்வியின் அடையாளமாக மாறும்.

தமிழ் மக்களும் தமிழ்த் தேசிய அரசியலும், இன்றைக்கு தோல்வியின் அடையாளமாக நோக்கப்படுவதற்கு, சந்தர்ப்பங்களைக் கையாளத் தெரியாத, தூரநோக்கற்ற, குறுகிய சுயநல அரசியலே பிரதான காரணம் எனலாம்.

இலங்கை, உள்ளூரிலும் சர்வதேச ரீதியிலும் இன்று சந்தித்து நிற்கின்ற பொருளாதார - இராஜதந்திர நெருக்கடிகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கான அவசரத்தைக் காட்டுகின்றது. அதற்காக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தன்னுடைய படை பட்டாளத்தோடு களத்தில் இறங்கியிருக்கிறார்.

உள்ளூரில் ராஜபக்ஷர்களோடு கூட்டு அமைத்திருக்கின்ற ரணில், சர்வதேச நெருக்கடிகளை நீக்குவதற்காக எரிக் சொல்ஹெய்ம் போன்றவர்களை அழைத்து வந்திருக்கிறார். கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை வெற்றிகரமாகக் கையாள்வது மாத்திரமன்றி, சந்தர்ப்பங்களை உருவாக்கி, அதிலும் வெற்றிபெறுவதற்காக அவர் இயங்கிக் கொண்டிருக்கின்றார்.

அதன்போக்கில்தான், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு, அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வைக் காண்பது என்கிற பொறியையும் அவர் வைத்திருக்கின்றார்.

ரணில் வைத்திருக்கின்ற பொறியில் சிக்கிக் கொள்ளாமல், தமிழ் மக்களுக்கான அரசியல் வெற்றியை எவ்வாறு அடைவது என்பது தொடர்பில் சிந்திப்பதுதான் தமிழ்த் தேசிய கட்சிகள் முன்னாலுள்ள ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும்.

ஆனால், தமிழ்த் தேசிய கட்சிகளும் அதன் தலைவர்களும், தமிழ் மக்களுக்கான அரசியல் வெற்றி என்கிற புள்ளியைப் புறந்தள்ளிவிட்டு, தனிப்பட்ட தங்களின் பதவி வெ(ற்)றிக்காக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த பொதுத் தேர்தலில், தமிழ்த் தேசிய கட்சிகள் மூன்று அணிகளாகப் பிரிந்து நின்று போட்டியிட்டன. அதனால், தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்திகளின் வெற்றி, வடக்கு - கிழக்கில் என்றைக்கும் இல்லாதளவுக்கு அதிகரிக்கக் காரணமானது.

யாழ்ப்பாணத்தில் அங்கஜனின் பெரு வெற்றியும், சுமார் 3,000 விருப்பு வாக்குகளைப் பெற்ற திலீபன், வன்னி மாவட்டத்திலிருந்து ஈ.பி.டி.பி சார்பில் வெற்றி பெறுவதற்கும், அம்பாறையில் கிடைக்க வேண்டிய ஓர் ஆசனமும் கருணாவிடம் காவு கொடுக்கப்படவும் தமிழ்த் தேசிய கட்சிகளின் முரண்பாடுகள் காரணமாகின.

இந்த முரண்பாடுகள் கொள்கை, கோட்பாடுகள் சார்ந்து எழுந்ததல்ல; மாறாக, தமிழ்த் தேசிய கட்சிகளுக்குள் 'நான் பெரிதா, நீ பெரிதா' என்கிற இழுபறியாலும் சுயநல போக்காலும் ஏற்பட்டது.

இப்போது, தமிழ்த் தேசிய கட்சிகளை ஓர் அணியாகப் பேச்சுவார்த்தை மேடைக்கு வருமாறு ரணில் வலையை விரித்திருக்கின்றார். அவர் விரித்திருக்கும் வலை, கிட்டத்தட்ட 'மாயவலை'.

சர்வதேச ரீதியில் இலங்கையை நெருக்கடிகளில் இருந்து மீட்பதோடு, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தன்னுடைய வெற்றியை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கங்களைக் கொண்டது.

குறிப்பாக, தமிழ் மக்களின் வாக்குகள் ஒட்டுமொத்தமாக தனக்கு எதிராகக் களத்தில் நிற்கவுள்ள சஜித்துக்கு கிடைக்கும் வாய்ப்புள்ளதால், அதை இல்லாமல் செய்வதற்கான நோக்கத்திலானதாகும்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில், தமிழ் மக்கள் தேர்தல் வாக்களிப்பை புறக்கணித்ததால், ஒரு இலட்சத்து எண்பதாயிரம் வாக்குகளால் அவர் ராஜபக்ஷவிடம் வெற்றியைப் பறிகொடுத்தார். தமிழ் மக்கள் அப்போது வாக்களித்திருந்தால், அந்த வாக்குகளில் 90 சதவீதமானவை ரணிலுக்கே கிடைத்திருக்கும்.

ஆனால், இப்போது நிலைமை அப்படியல்ல; ரணில் - ராஜபக்ஷர்களின் கூட்டு. அதனால், ரணிலுக்கு எதிரான வேட்பாளரை நோக்கியே, தமிழ் மக்கள் நகர்வார்கள். அந்த நகர்வில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும். அப்படியான நிலையில், கூட்டமைப்பை உடைத்து, பல கோணங்களில் சிதற வைப்பது என்பது, தமிழ் மக்களின் வாக்குகளை ஓரணியில் திரள்வதைத் தடுப்பதற்கான உத்தி என ரணில் நினைக்கிறார்.

அதனால்தான், தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட போது, தனக்கு வாக்களித்தவர்கள் யார் யார் என்பதெல்லாம் தனக்குத் தெரியும் என்று, கூட்டமைப்புடனான சந்திப்பில் ரணில் கூறவும் செய்தார்.

கூட்டமைப்பு பலம் பெறுவதையோ, தமிழ்த் தேசிய கட்சிகள் ஓரணியில் திரள்வதையோ, தென்இலங்கையின் எந்தச் சக்தியும் எந்தக் காலத்திலும் விரும்பாது. ரணிலும் அதே புள்ளியில் நின்றுதான் விடயங்களைக் கையாள்கிறார்.

ஆனால், இந்த வெளிப்படையான சதி வலையில் சிக்காமல், விலகி நின்று, தமிழ் மக்களின் இறைமையையும் உரிமையையும் காக்க வேண்டிய பொறுப்புடையனவாக இருக்கும் தமிழ்த் தேசிய கட்சிகள், தங்களின் தனிப்பட்ட தேர்தல் இலாபநட்டக் கணக்கை பார்க்கத் தொடங்கி விட்டன.

எதிர்வரும் ஆண்டு முதல் காலண்டுக்குள், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற இருக்கின்றது. அதன், பின்னராக வரப்போகும் மாகாண சபைத் தேர்தல்கள், பொதுத் தேர்தலுக்கான பரீட்சார்த்த களமாக இருக்கும்.

ஏனெனில், 2015ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு அனுப்பப்பட்ட ராஜபக்ஷர்கள், 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தங்களது மீள்வருகையைப் பதிவு செய்தனர். தென்இலங்கை பூராவும் ராஜபக்ஷர்களுக்கான வெற்றி பறைசாற்றப்பட்டது.

அந்தத் தேர்தலில் வடக்கு - கிழக்கில், கூட்டமைப்பு முதல் முதலாக பெரும் பின்னடைவைச் சந்தித்தது. அது, கடந்த பொதுத் தேர்தலில் பெருவாரியாக பிரதிபலிக்கவும் செய்தது. 16 பாராளுமன்ற உறுப்பினர்களோடு இருந்த கூட்டமைப்பு, 10 உறுப்பினர்களுக்குள் சுருங்கியது.

தமிழரசுக் கட்சியின் தலைவர், செயலாளர் உள்ளிட்டவர்கள் தோற்றும் போனார்கள். அப்படியான நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் என்பது, தமிழ் மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் களம். அந்தக் களத்தை சாதகமாகக் கையாள வேண்டும் என்பது ஒவ்வொரு தேர்தல் மையக் கட்சியினதும் இலக்காக இருக்கும். இது, அடிப்படையில் தவறும் இல்லை.

ஆனால், இந்தத் தேர்தல் களத்தில் வெற்றி காண்பதற்காக, மிக முக்கியமான பேச்சுவார்த்தைக் கட்டத்தை வைத்து, கேலிக்கூத்து நாடகத்தை தமிழ்த் தேசிய கட்சிகள் ஆடுகின்றன.

அரசுக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை திகதிகளை திட்டமிடும் சந்திப்புக்கான அழைப்பை ஜனாதிபதி விடுத்தால், அந்தக் கூட்டத்தில் தங்களால் பங்கெடுக்க முடியாது என்றதும், அதில் குறு அரசியல் செய்ய சி.வி விக்னேஸ்வரன் உள்ளிட்டவர்கள் முயல்கிறார்கள்.

யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இன்னமும் தமிழ்த் தேசிய கட்சிகளின் மூத்த தலைவர் இரா. சம்பந்தன்தான். அவரை முன்னிறுத்தித்தான் பேச்சுவார்த்தை மேடையில் எந்தத் தமிழ்த் தேசிய கட்சியாக இருந்தாலும் அமர வேண்டும். அதனால்தான், தமிழ்த் தேசிய முன்னணி, பல்வேறு காரணங்களைச் சொல்லி அதனை ஆரம்பத்திலேயே தவிர்த்துவிட்டது.

சம்பந்தன் முன்னிலை வகிக்கும் தரப்பில், எம்.ஏ சுமந்திரன் மிக முக்கிய இடத்தைப் பிடிப்பார். ஏனெனில், தந்தை செல்வாவின் மனச்சாட்சியாக இருந்த அமிர்தலிங்கம் மாதிரி, இன்றைக்கு சம்பந்தனின் குரலாக சுமந்திரனே ஒலிக்கின்றார். சுமந்திரன் இல்லாமல் சம்பந்தன் எந்தச் சந்திப்பிலும் கலந்து கொள்வதில்லை.

பங்காளிக் கட்சித் தலைவர்கள் சந்திக்க விரும்பினாலும் கூட, "சுமந்திரனையும் அழைக்கவா" என்று அவர் கேட்கும் நிலையில் இருக்கிறார். ஏனெனில், அவரது உடல்நிலை தளர்வடைந்துவிட்டது. அவர் என்ன பேசுகிறார் என்பது, பல தருணங்களில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கே விளங்குவதில்லை. அதனால், சம்பந்தனின் குரலாக அங்கு சுமந்திரன் அவசியமாகிறார். அது, சுமந்திரனுக்கான முக்கியத்துவத்தை உருவாக்கிவிட்டது.

அதனால்தான், பேச்சுவர்த்தைக்கான திகதிகளை, முன்னேற்பாடுகளை தீர்மானிக்கும் சந்திப்புக்கு, தங்களை நேரடியாக அழைக்காமல் சுமந்திரன் ஊடாக அழைத்ததால், விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் பங்கெடுக்கவில்லை. அதில், அதிகமானவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தது முக்கிய காரணம்.

இவ்வாறான சூழலில், ரணிலுடன் சம்பந்தனும் சுமந்திரனும் சந்திப்பதானது, தங்களுக்கான முக்கியத்துவத்தை குறைக்கின்றது என்று எண்ணியதும், பேச்சுவார்த்தைக்கான விடயத்தில் சுமந்திரனை முன்னிறுத்தக்கூடாது என்ற சாரப்பட ரணிலுக்கு விக்னேஸ்வரன் கடிதம் எழுதுகிறார்.

உண்மையில் இந்தக் கடிதம், தென் இலங்கையில் கொண்டாட்டங்களை வரவழைக்கக்கூடியது. இருக்கின்ற 13 தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்குள் பல பிரிவுகள்; இவர்கள் எந்த இடத்திலும் ஓரணியில் வரமாட்டார்கள்; அதனால், பேச்சுவார்த்தை மேடையில் ஏதுவும் நிகழாது; சர்வதேசத்துக்கு தமிழ் மக்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்த மாதிரி காட்டியும் ஆகிவிட்டது; அது சாத்தியமான அடைவுகளை அடையாது விட்டமைக்கு, தமிழ்த் தேசிய கட்சிகளின் இழுபறியை காரணம்காட்டியும் ஆகிவிட்டது என்று விடயத்தை முடித்துவிடுவார்கள்.

அதற்கான ஏற்பாடுகளைத்தான், தமிழ்த் தேசிய கட்சிகளின் தூரநோக்கற்ற தலைவர்கள் இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறார்கள். இது, தமிழ்த் தேசிய போராட்டத்தை இன்னும் பலமாக தோற்கடிக்கவே செய்யும்.

## கடிதங்கள்

### சுனாமி ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்த மையவாடியில் சிரமதானம் தேவை



அம்பாறை மாவட்டத்தில், 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தில் கரையோர பிரதேசங்களில் மரணித்தோரின் ஜனாஸாக்களை, நல்லடக்கம் செய்துள்ள சம்மாந்துறை காட்டுப்பள்ளி மையவாடி, புற்கள் வளர்ந்து பற்றைக்காடாக மாறியிருக்கிறது.

டிசெம்பர் 26ஆம் திகதி சுனாமி தாக்கத்தின் 18ஆவது ஆண்டு நிறைவை அனுஷ்டித்த மக்கள், குறித்த மையவாடிக்கு சென்று, அங்கு நல்லடக்கம் செய்துள்ள உறவினர்களுக்காக துஆ பிராத்தனையில் ஈடுபட்டனர்.

சுனாமி அலையில் அள்ளுண்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு, ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக அடைக்கலம் கொடுத்த சம்மாந்துறை மக்கள், மரணித்த சகோதரர்களின் உடல்களையும் சம்மாந்துறையின் பல மையவாடிகளில் நல்லடக்கம் செய்ய வாய்ப்பளித்தனர். மரணித்த சகோதர்களை கௌரவிக்கும் விதமாக, அந்தப் பிரதேசத்தை வேலியமைத்து, குறித்த பள்ளிவாசல் நிர்வாகமும் சம்மாந்துறை மக்களும் பாதுகாத்து வருகின்றனர். இருந்தாலும், இந்த மையவாடியின் இன்றைய நிலை கவலையளிக்கும் நிலையாக மாறியிருக்கிறது.

எனவே, குறித்த மையவாடியை சிரமதானம் செய்து, அந்த மையவாடிக்கான பெயர்பலகையை பொருத்த அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிவில் அமைப்புகள், அரசியல் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்கள் முன்வரவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

நூருல் ஹுதா உமர்

பொருளாதார நெருக்கடிகளுக்கு

# ‘ஹேலிய்ஸ்’ தரும் வெற்றிகர தீர்வுகள்

## செல்வம் கொழிக்கும் உணவு, உடை உற்பத்திகளும் ஏற்றுமதிகளும்

**பஸ்தியாம்பிள்ளை ஜோண்சன்**

எமது நாடு தற்போது எதிர்நோக்கி இருக்கும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நிரந்தரமாக மீள்வதற்கு, உல்லாச பயணத்துறைக்கு அப்பால், நடைமுறைச்சாத்தியமான வழிமுறையாக இருப்பது உற்பத்திப் பெருக்கமும் அதிகரித்த ஏற்றுமதியும் ஆகும்.

அந்தவகையில், உள்ளூர் உற்பத்திகளை வெளிநாட்டவரின் தேவைக்கும் விருப்பத்துக்கும் இரசனைக்கும் ஏற்ப தயாரித்து, ஏற்றுமதி செய்வது சிறந்த வழிமுறையாகும். இத்தகைய வழிமுறையை, இலங்கையின் வர்த்தகத்துறையில் 200 ஆண்டுகளை எட்டவுள்ள ‘ஹேலிய்ஸ்’ நிறுவனம் பின்பற்றி வருகின்றது.

குறிப்பாக, உணவு, உடை உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் இலங்கையில் முதன்மையானதும் முன்னணியானதுமான நிறுவனமாக ‘ஹேலிய்ஸ்’ திகழ்கின்றது. இதற்குச் சான்றாக, சர்வதேச ரீதியில் ‘ஹேய்லிஸ்’ பெற்றுக்கொண்ட மதிப்புமிக்க உயர்விருதுகளும் இலங்கையின் வெளிநாட்டு நாணய கையிருப்புக்கு அது பெற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கும் டொலரும் காணப்படுகின்றன.


ஜெயந்தி தர்மசேன
முகாமைத்துவ பணிப்பாளர்

உணவு, உடை ஆகிய இரண்டு துறைகளிலும், தமது வெற்றிகரமான பயணத்தை உறுதிப்படுத்தும் முகமாக, ஊடகவியலாளரை அழைத்துச் சென்று விளக்கமளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்மூலம், பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்திருக்கும் ஹேலிய்ஸ் நிறுவனத்தின் உபநிறுவனமாக அமைந்திருக்கும் HJS சுவையூட்டும் உணவுப்பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையினதும் ஹொரணையில் அமைந்திருக்கும் ஹேய்லிஸ் ஆடை உற்பத்தி தொழிற்சாலையினதும் புத்தாக்கச் செயற்பாடுகள், உற்பத்தி நுணுக்கங்கள் போன்றவற்றை அறிந்து கொள்ள முடிந்தது.


ஆனந்த சி. பத்திரன
இயக்குநர், பிரதம
செயற்பாட்டு அதிகாரி

### விவசாயத்துறை

‘ஹேலிய்ஸ்’ நிறுவனத்தின் விவசாயத்துறை சார்ந்த தொழில் முனைப்பைப் பொறுத்தமட்டில், பழங்கள், மரக்கறிகள் என்பவற்றை 50க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதனூடாக, இலங்கையின் மொத்த உணவு ஏற்றுமதியில் சுமார் 60 சதவீதத்தை தன்னகத்தே வைத்துக்கொண்டுள்ளது.

பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்திருக்கும் HJS சுவையூட்டும் உணவுப்பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில், பழங்களும் மரக்கறிகளும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக பதப்படுத்தப்பட்டு, வெளிநாட்டு சந்தைகளுக்கு மட்டும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தத் தொழிற்சாலையின் செயற்பாடுகள் குறித்து அதன் முகாமைத்துவ பணிப்பாளர் ஜெயந்தி தர்மசேன, இயக்குநரும் பிரதம செயற்பாட்டு அதிகாரியுமான ஆனந்த சி. பத்திரன ஆகியோர் விளக்கமளித்தார்கள்.

இவர்கள் தெரிவித்த கருத்துகள் பின்வருமாறு அமைந்திருந்தன: இங்கு, முக்கியமாக தேங்காய், பலாக்காய், முருங்கை, வெள்ளரிக்காய் உட்பட வெப்பமண்டலம் மற்றும் ஆரோக்கியம் சார்ந்த உணவுப் பொருட்கள் என்பன அவற்றின் மதிப்பும் சுவையும் சத்தும் கெடாதவாறு பதப்படுத்தப்பட்டு, பாதுகாப்பும் கவர்ச்சியும் மிக்க கொள்கலன்களில் அடைக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தென்னை சார்ந்த உணவுப்பொருட்களில் இருந்து சுமார் 18 வகையான உணவுப் பொருட்களும் பலாக்காயில் இருந்து ஏழும் முருங்கையில் இருந்து ஆறு உணவுப் பொருட்களும் வெள்ளரியில் இருந்து 15 உணவுப் பொருட்களும் வெப்பவலய உணவுப் பொருட்களாக அன்னாசி, செவ்விளநீர் என்பனவும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. குறிப்பாக, செவ்விளநீரின் சுவையும் இதமும் பதமும் கெடாதவாறு, செவ்விளநீர் மரத்தின் வடிவம் கொண்ட போத்தலில் அடைக்கப்படுகிறது. ஆரோக்கியம் தரும் உணவுப் பொருட்களாக உள்ளி கலந்த தேன், கறுவா பானம், கறுவா கலந்த தேன் என்பன தயாரிக்கப்படுகின்றன.

இலங்கைக்கே உரித்தான மசாலாப் பொருட்களான கறுவா, மிளகு, வெள்ளை மிளகு ஆகியவற்றிலிருந்து நான்கு வகைப் பொருட்களும், மரக்கறிகளில் இருந்து சுமார் 19 வகை உணவுப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன.


பட்டிகள் ஊடாக வரும்போது, சிறப்புத்தேர்ச்சி பெற்ற நிபுணர்களால் தரம்பிரிக்கப்படுகின்றன

இவற்றைவிட அண்மைக்கால உற்பத்தியாக, விதை இல்லாத பலாப்பிஞ்சில் இருந்து இறைச்சிக்கு மாற்றீடாக, உலக சைவ உணவுப் பிரியர்களைக் கவரக்கூடிய வகையில், உடனடி கறிவகைகளும் தயாரிக்கப்படுகின்றன.

அத்துடன், மக்டொனால்ட், சப்வே, ஹங்கரி ஜக்ஸ், பேகர் கிங், டொமினோஸ் பீஸா போன்ற உலகளாவிய வலையமைப்பில் இயங்கும் உணவு தயாரிப்பு நிறுவனங்களுக்கும் ஊறுகாய் வகைகளை விநியோகம் செய்யும் பிரதான நிறுவனமாகவும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு பச்சை வெள்ளரியை ஏற்றுமதி செய்யும் பிரதான நிறுவனமாகவும் HJS திகழ்கின்றது.

முக்கியமாக, ஒவ்வொரு வெளிநாட்டாரினதும் இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கசப்பு, கார்ப்பு, துவர்ப்பு போன்ற அறுசுவையின் தன்மையும் வேறுபடுகின்றது. அந்தந்த நாட்டவர்களுக்கு ஏற்ற உணவு வகைகளை உற்பத்தி செய்வது தமது தனித்துவம் என்கின்றார்கள். அதாவது, உறைப்பு சுவையில் ஒன்று முதல் பத்து வரையில் உறைப்பு சுவையின் பெறுமான அலகு காணப்படுகின்றது. எவருக்கு எந்தப் பெறுமான அலகில் உறைப்பு சுவை வேண்டுமோ, அதற்கேற்றவாறு உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

சர்வதேச தர நிர்ணய விதிமுறைகளை அச்சொட்டாகப் பேணும் HJS தொழிற்சாலையில், மேற்குறிப்பிட்ட உணவுப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்போது, ஒவ்வொரு அரை மணிநேரத்துக்கு ஒருதடவை தரஉறுதி ஆய்வு செய்யப்படுகின்றன. பிரத்தியேக தண்ணீரில் நவீன இயந்திரங்களால் கழுவப்படும் உணவு மூலப்பொருட்கள், பட்டிகள் ஊடாக வரும்போது, சிறப்புத்தேர்ச்சிபெற்ற நிபுணர்களால் தரம்பிரிக்கப்படுகின்றன. தயாரிப்புகளின் போது சகல சந்தர்ப்பங்களிலும் தரத்திலும், சுகாதாரத்திலும் அக்கறையுடன் கவனம் செலுத்துவதை அவதானிக்க முடிந்தது.


உண்பதற்குத் தயாராக பதப்படுத்தப்பட்ட வெள்ளரி, போத்தல்களில் அடைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பிரமாண்ட அளவிலான உணவுப்பொருள் பதப்படுத்தல் - தயாரிப்பு என்பவற்றுக்கான மூலப்பொருட்கள் எங்கிருந்து, எவ்வாறு பெற்றுக்கொள்ளப்படுகின்றன என்ற ஐயம் எழுவது இயல்பானதே!

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் இருந்தே பிரதானமாக உணவு உற்பத்திக்கான மூலப்பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. 12,500க்கும் மேற்பட்ட விவசாயிகளை உள்ளடக்கிய வலையமைப்பினூடாக இவை பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இவர்கள் 16 விவசாய விரிவாக்கல் அலுவலர்களின் ஆலோசனையின் கீழ் உற்பத்திகளை மேற்கொள்கின்றார்கள். இந்த விவசாயிகள் அனைவரும் பூரணமாக பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். 2021ஆம் ஆண்டில், 215 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு, வாகரையில் விவசாய நல புத்தாக்கத்துக்கு ‘ஹேலிய்ஸ்’ நிறுவனம் பாரிய பங்களித்து வருகின்றது. இங்கு விவசாயிகள் பெருமளவில் வெள்ளரி செய்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள். விவசாயத்துறை நல புத்தாக்கத் திட்டமானது, விவசாயிகளுக்குத் தேவையான புதிய தொழில்நுட்பம், பணம், உபகரணங்கள் என்பவற்றை வழங்கி, விளைபொருட்களை விற்பனை செய்வதற்குத் தேவையான சந்தையை வழங்கி, விவசாயிகளை அதிக வருமானம் ஈட்டக்கூடியவர்களாக மாற்றுவதாகும்.

மேலும், வானிலை மாற்றங்களுக்கு ஏற்ப, திறன் விவசாய தீர்வுகளில் தாவர நாற்று மேடைகள் முதல் வயல் திட்டங்களின் ஊடாக பாதகமில்லாத வாழ்வாதாரம் உறுதி செய்யப்படுகின்றது. குறிப்பாக, சொட்டுநீர் நீர்ப்பாசனத் திட்டம், வரட்சியைத் தாங்கக் கூடிய பயிர்வகைகள் என நிலைபேறான விவசாய நடவடிக்கைகள் ‘ஹெலிய்ஸ்’ நிறுவனத்தால் ஊக்குவிக்கப்பட்டு, விவசாயிகளின் வாழ்வாதாரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


பலாப்பிஞ்சு ‘பாபிக்கியு’ கறிகள் உண்பதற்குத் தயாராக...




### உடை உற்பத்தி



‘ஹேலிய்ஸ்’ நிறுவனத்தின் உடை உற்பத்தியைப் பொறுத்தவரையில், இலங்கையில் ஜவுளி உற்பத்தியில் முன்னோடியாக விளங்குகின்றது. இத்துறையில் ‘ஹேலிய்ஸ்’ 1992ஆம் ஆண்டில் கால்பதித்தது. இன்று தனது சொந்த INNO என்ற வணிகச் சின்னத்தின் ஊடாக, உலகின் அதிக அளவிலான புதுமையான திறன்களையும் பயனுள்ள தீர்வுகளையும் வழங்கும் உலகத் தரம் வாய்ந்த முன்னணி ஆடை உற்பத்தியாளராகத் திகழ்கின்றது.

மாதத்துக்கு மூன்று மில்லியன் மீற்றருக்கும் அதிகமான துணியை நெய்யும் திறனுடன் 72 மில்லியன் அமெரிக்க டொலர் வருடாந்த வருவாய் பெறும் நிறுவனமாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

உலகின் முன்னணி வர்த்தகச் சின்னங்களான விக்டோரியா சீக்ரட், NIKE, Calvin Klein, Decathlon, Intimissimi, Asics போன்றவற்றுக்கான துணி வழங்குனராகவும் ‘ஹேலிய்ஸ்’ திகழ்கின்றது.

‘ஹேலிய்ஸ்’ ஆடை உற்பத்தி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரொஹான் குணதிலக்க தெரிவிக்கும் போது, “மாகோகனி மரத்தில் இருந்து இயற்கை சாயத்தைப் பயன்படுத்துவதும் பிளாஸ்டிக் போன்ற கழிப்பொருட்களில் இருந்தான ஆடை உற்பத்தியும் சர்வதேச அங்கிகாரத்தைப் பெற்றுள்ளது. இவை, சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களுக்கு முன்னுரிமை அளித்து, ஆடை உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு வலுவான உதாரணங்களாக அமைகின்றன.

மூலப்பொருள் தெரிவு, உற்பத்தி செயல்முறை முதல் விநியோகம் வரை ஒவ்வொரு கட்டத்திலும், ஆடைத் தொழிலின் சுற்றுச்சூழல் தாக்கத்தை கணக்கில் எடுத்து, சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் சந்தர்ப்பங்களை குறைக்க முன்னுரிமை அளித்துவருகிறோம்” என்றார்.

இந்த ஆடை உற்பத்தி தொழிற்சாலையைச் சூழ இருக்கும் ஒன்பது ஏக்கர் சதுப்பு நிலத்தின் பல்லுயிர்களைப் பாதுகாக்கும் பணிகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலத்தில் பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்துவதற்காக ஆறு மில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக, இயற்கையின் வாழ்விடம் பாதுகாக்கப்படுவதுடன் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு மற்றும் உயிரியல் வாழ்வாரங்கள் பராமரிக்கப்படுவதும் உறுதிப்படுத்தப்படுகின்றது.



---

சேலம்

# குடும்பத்தை கொன்ற ‘சர்க்கரை’

சேலம், தாதகாப்பட்டியை சேர்ந்தவர் யுவராஜ். 42 வயதான அவரும் அவரது மனைவியும் சேலத்தில் உள்ள தனியார் டைல்ஸ் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்துள்ளனர். இவர்களுக்கு 7 மற்றும் 5 வயதில் இரு மகள்கள் உள்ளனர்.

இவர்களில் மூத்த மகள் நிதிஷா கடந்த 3 ஆண்டுகளாக சர்க்கரை நோயால் அவதிப்பட்டு வந்துள்ளார்.



இந்நிலையில் சில நாள்களுக்கு முன்னர் 2 ஆவது மகளுக்கும் சக்கரை நோய் இருப்பது தெரிய வந்துள்ளது. இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான தம்பதி, ‘குடும்பத்துடன் உயிரை மாய்த்துக் கொள்ளலாம்’ என்ற விபரீத முடிவை எடுத்துள்ளனர்.

இதனையடுத்து கடிதமொன்றை எழுதி வைத்துவிட்டு யுவராஜ், தனது மனைவி மற்றும் 2 மகள்களுடன் மோட்டார் சைக்கிளில் மேட்டூர் அருகே உள்ள சின்ன காவல் மாரியம்மன் காவிரி ஆற்றின் நீர்தேக்க பகுதிக்கு சென்று தமது மகள்கள் இருவரையும் ஆற்றில் தள்ளிவிட்டுள்ளனர்.

இதில் 2 மகள்களும் தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். பின்னர் தம்பதியும் ஆற்றில் குதித்து தமது உயிரை மாய்த்துக் கொண்டனர்.

---

விழுப்புரம்

# நடுக்கடலில் நீரை உறிஞ்சிய இராட்சத மேகம்



விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே ஆலம்பாறை என்ற இடத்தில் இருந்து கடலுக்குள் 5 கிலோ மீற்றர் தொலைவில் விசைப்படகில் மரக்காணம் பகுதியை சேர்ந்த மீனவர்கள் தங்கியிருந்து மீன் பிடித்துக்கொண்டு இருந்துள்ளனர்.

இதன்போது திடீரென கடல்நீர் சுழல் போல் மேலெழுந்து மேகங்களுக்குள் இழுக்கப்பட்டுள்ளது.

இக் காட்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்த மீனவர்கள் தமது அலைபேசில் அதனை வீடியோ எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியுள்ள நிலையில் குறித்த வீடியோவானது இணையத்தில் வைரலாகத் தொடங்கியுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த துறைமுக அதிகாரி, “கடலின் மேல் வீசும் காற்று குளிர்ந்த காற்றாகவும், கடல் காற்று சற்று வெப்பமாகவும் இருந்தால், கடலில் ‘நீர்த்தாரைகள்’ எனப்படும் இந்த அதிசய நிகழ்வு ஏற்படும். பொதுவாக பருவநிலை மாற்றம் ஏற்படும் போது இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறும். இவ்வினோத நிகழ்வின்போது கடலின் நீர் அதிவேகமாக உறிஞ்சப்பட்டு மேகமாக மாறி விடும்.

இந்நிகழ்விற்கு ஆங்கிலத்தில் ‘டோர்னடோ’ என்று பெயர். இதுபோன்ற நிகழ்வுகள் ஐரோப்பா போன்ற பகுதிகளிலேயே அதிக அளவில் இடம்பெறுகின்றன” எனத் தெரிவித்துள்ளார்.

---

# மூக்கு வழி கொரோனா தடுப்புமருந்து அறிமுகம்



மூக்கு வழி கொரோனா தடுப்பு மருந்தானது இந்தியாவில் ஜனவரி மாத இறுதியில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

கோவேக்சின் தடுப்பு மருந்தைத் தயாரித்த, ஐதராபாத் பாரத் பயோடெக் நிறுவனம் அமெரிக்காவின் வொஷிங்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ‘பிபிவி154’ என்ற பெயரில் மூக்கு வழியே செலுத்துகிற கொரோனா தடுப்பு மருந்தை உருவாக்கியுள்ளது.

இந்த மூக்கு வழி தடுப்பு மருந்தானது, ‘இன்கோவாக்’ என்ற வணிகப்பெயருடன் சந்தைக்கு வரவுள்ளதுடன் பூஸ்டர் டோஸ் தடுப்பு மருந்தாக அறிமுகம் செய்யப்படவுள்ளது.

---

அசாம்

# அசாமில் அதிர்ச்சி

## வீடுகளைப் பந்தாடிய ஆலங்கட்டி

அசாம் மாநிலத்தில் கடந்த சில நாள்களாகக் கனமழை பெய்து வருகின்றது.

இந்நிலையில் அண்மையில் திப்ருகர், சிவசாகர், தின்சுகிகா உள்ளிட்ட மாவட்டங்களில் திடீரென ஆலங்கட்டி மழை பெய்துள்ளது.

எனினும் டிசெம்பர் மாதத்தில் அசாமில் ஆலங்கட்டி மழை பெய்வது அரிதான நிகழ்வு என வானிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் ஆலங்கட்டி மழை காரணமாக சுமார் 4,500 வீடுகள், விளைநிலங்கள் மற்றும்



பாடசாலைக்கட்டடங்கள், சேதமடைந்துள்ளன. அதேசமயம் வீடுகளை இழந்த பொதுமக்கள் பாதுகாப்பான முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

புதுடெல்லி

# உறவினரின் காருக்குத் தீவைத்த நபர்

## 20 கார்கள் தீக்கிரை

புதுடெல்லியில், நபர் ஒருவர் தனது உறவினர் ஒருவரின் காருக்குத் தீ வைத்துள்ள நிலையில், அருகே இருந்த 20 கார்களுக்கும் தீப்பரவிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினத்தன்று நள்ளிரவு வேளை புதுடெல்லி, சுபாஷ்நகரில் உள்ள ஒரு தனியார் கார் நிறுத்தத்துக்குச் சென்ற குறித்த நபர், அங்கிருந்த தனது உறவினரின் காருக்குத் தீ வைத்துள்ளார்.

இதன் போது எதிர் பாராத விதமாக அருகில் இருந்த கார்களுக்கும் தீ பரவிய நிலையில் சுமார் 20 கார்கள் தீக்கிரை ஆகின.



இச்சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்ட நிலையில், CCTV கெமராவின் உதவியுடன் குறித்த நபரைப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் பொலிஸாரின் விசாரணையில் தனது உறவினரைப் பழிவாங்கவே இவ்வாறு செய்ததாகவும், எதிர் பாராத விதமாக ஏனைய கார்களுக்கும் தீ பரவியதாகவும் அந்நபர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



சீனா

# 200க்கும் மேற்பட்ட வாகனங்கள் அடுத்தடுத்து விபத்து

சீனாவின் ஹெனான் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான பனிமூட்டம் காரணமாக 200க்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒன்றோடொன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

செங்சுவு நகரில், மஞ்சள் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மேம்பாலத்திலேயே நேற்றைய தினம் (28) இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் இவ் விபத்தில் சிக்கி பலர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்வான்

## தாய்வானில் கட்டாய இராணுவ சேவை நீடிப்பு



தாய்வானில் வரும் 2024-ஆம் ஆண்டு முதல், கட்டாய இராணுவ சேவையை நான்கு மாதங்களில் இருந்து ஒரு வருடமாக அதிகரிக்கவுள்ளதாக, தாய்வான் அரசு அறிவித்துள்ளது.

இராணுவ, இராஜதந்திர மற்றும் பொருளாதார ரீதியில் சீனா அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், இந்த நடவடிக்கையை தாய்வான் அரசு எடுத்துள்ளது.

இது குறித்து தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென்(Tsai Ing-wn) கருத்துத் தெரிவிக்கையில் "அதிகரித்து வரும் சீனாவின் இராணுவ அச்சுறுத்தல்களைச் சமாளிக்க, தற்போதைய இராணுவ அமைப்புகள் போதுமானமானதாகஇல்லை என்பதால் இக் கடுமையான முடிவு எடுக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

புர்கினோ பாசோ

## கண்ணிவெடியில் சிக்கிய பஸ்

### 10 பேர் உயிரிழப்பு

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினோ பாசோவில் கடந்த 2013ஆம் ஆண்டு முதல் பல பயங்கரவாத குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

இந்நிலையில் புர்கினோ பாசோவின் கிழக்கு பகுதியில் நைஜர் நாட்டின் எல்லையொட்டி அமைந்துள்ள படா கவுமா பிராந்தியம் அருகே அண்மையில் பயணிகள் பஸ்ஸொன்று கண்ணிவெடியில் சிக்கி வெடித்துச் சிதறியது.

இதில் சம்பவ இடத்திலேயே 10 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். 5 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




உகண்டா

102 குழந்தைகள்: 12 மனைவிகள்

## மனைவிகளுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்யப் போகிறேன்



உகண்டாவை சேர்ந்த மூசா என்ற 67 வயதான நபருக்கு, 12 மனைவிகள், 102 குழந்தைகள் மற்றும் 568 பேரக் குழந்தைகள் உள்ளனர். பிரபல ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் "இனிமேல் என்னால் முடியாது, நான் எனது மனைவிகளை குடும்பக் கட்டுப்பாடு செய்யுமாறு கூறியுள்ளேன்" எனத் தெரிவித்திருந்தமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது,

செல்வந்தரான மூசா தன்னுடைய 16 வயதில் திருமணம் செய்து கொண்டதாகவும், தனது சொத்துக்களை விரிவாக்கம் செய்ய முடிவெடுத்தே அடுத்தடுத்து திருமணங்களைச் செய்து கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் குறித்த செவ்வியில்"என்னால் இதற்கு மேல் ஒரு குழந்தையையும் கவனித்துக் கொள்ள முடியாது. எல்லா மனைவிகளையும் குடும்ப கட்டுப்பாடு செய்ய சொல்லி அறிவுறுத்திவிட்டேன்.எனது 102 பிள்ளைகளையும் அவர்களது பெயரை நினைவுபடுத்தி அழைக்க முடியவில்லை.

இனிவரும் சந்ததிகளுக்கு நான் ஒரு அறிவுரை சொல்ல விரும்புகிறேன் 4 மனைவிகளுக்கு மேல் திருமணம் செய்யாதீர்கள், ஏன் என்றால் இங்கு எதுவும் நாம் நினைப்பது போல மகிழ்ச்சியாக இல்லை" என்றார்.

அமெரிக்கா

## 2ஆவது நாளாக 3,800 விமானங்கள் ரத்து





அமெரிக்காவில் வீசிவரும் பனிப்புயல் காரணமாக 2ஆவது நாளாகவும் 3,800 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனிப்புயலின் கோரத்தாண்டவத்தால் நியூயோர்க் மாகாணத்தின் இரண்டாவது பெரிய நகரமான பஃபலோவில் கண்ணுக்கு எட்டிய தூரம்வரை பனிக்கட்டிகள் குவிந்து கிடக்கின்றன. இதன் காரணமாக வீடுகள், மரங்கள், வாகனங்கள் என அனைத்தும் வெண்பட்டுப் போர்த்தியது போன்று காட்சியளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிழலையில் பனிப்புயல் பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 60ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தொடருக்கான

# இந்தியக் குழாமிலிருந்து தவான், புவ்னேஷ்வர் குமார் நீக்கம்




இலங்கைக்கெதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டி களுக்கான இந்தியக் குழாம்களில் ஷீகர் தவான், புவ்னேஷ்வர் குமார், றிஷப் பண்ட், ஜஸ்பிரிட் பும்ரா, இரவீந்திர ஜடேஜா, தீபக் சஹர் ஆகியோர் இடம்பெறவில்லை.

இந்நிலையில், இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளுக்கான குழாமில் காயத்தால் அணித்தலைவர் றோஹித் ஷர்மா இடம்பெறாததோடு, லோகேஷ் ராகுல், விராட் கோலி, ஷ்ரேயாஸ் ஐயர், மொஹமட் சிராஜ் ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளதோடு மொஹமட் ஷமியும் இடம்பெறாத நிலையில், புதுமுகவீரர்களான ஷிவம் மவி, முகேஷ் குமார் ஆகியோர் முதற் தடைவயாக குழாமுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

குழாம்: ஹர்டிக் பாண்டியா (அணித்தலைவர்), இஷன் கிஷன் (விக்கெட் காப்பாளர்), ருத்துராஜ் கைகவாட், ஷுப்மன் கில், சூரியகுமார் யாதவ் (உப அணித்தலைவர்), தீபக் ஹூடா, ராகுல் ட்ரிபாதி, சஞ்சு சாம்ஸன், வொஷிங்டன் சுந்தர், யுஸ்வேந்திர சஹால், அக்ஸர் பட்டேல், அர்ஷ்டீப் சிங், ஹர்ஷால் பட்டேல், உம்ரான் மலிக், ஷிவம் மவி, முகேஷ் குமார்.

இந்நிலையில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான குழாமில் ராகுல் இருக்கத்தக்க ஹர்டிக் பாண்டியா உப அணித்தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

குழாம்: றோஹித் ஷர்மா (அணித்தலைவர்), ஷுப்மன் கில், விராட் கோலி, சூரியகுமார் யாதவ், ஷ்ரேயாஸ் ஐயர், லோகேஷ் ராகுல் (விக்கெட் காப்பாளர்), இஷன் கிஷன் (விக்கெட் காப்பாளர், ஹர்டிக் பாண்டியா (உப அணித்தலைவர்), வொஷிங்டன் சுந்தர், யுஸ்வேந்திர சஹால், குல்டீப் யாதவ், அக்ஸர் பட்டேல், மொஹமட் ஷமி, மொஹமட் சிராஜ், உம்ரான் மலிக், அர்ஷ்டீப் சிங்.

தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

## வெற்றியை நோக்கி அவுஸ்திரேலியா



தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் வெற்றியை நோக்கி அவுஸ்திரேலியா பயணிக்கிறது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், மெல்பேணில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய மூன்றாம் நாளை, தமது இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 386 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியா, 51 ஓட்டங்களுடன் ட்ரெவிஸ் ஹெட்டை அன்றிச் நொர்கியாவிடம் இழந்ததோடு, அடுத்து வந்த வோர்னரும் மேலும் ஓட்டங்களைச் சேகரிக்காது நொர்கியாவிடம் வீழ்ந்ததுடன், அணித்தலைவர் பற் கமின்ஸூம் ககிஸோ றபாடாவிடம் வீழ்ந்தார். பின்னர் சிறிது நேரத்தில் நேதன் லையனும் லுங்கி என்கிடியிடம் வீழ்ந்தார்.

இந்நிலையில், 111 ஓட்டங்களைப் பெற்ற அலெக்ஸ் காரி மார்கோ ஜன்சன்னிடம் வீழ்ந்ததைத் தொடர்ந்து 8 விக்கெட்டுகளை இழந்து 575 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் பெற்ற அவுஸ்திரேலியா தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. களத்தில், வெடிப்புற்ற விரலுடன் துடுப்பெடுத்தாடிய கமரொன் கிறீன் 51 ஓட்டங்களுடனும், மிற்செல் ஸ்டார்க் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலிருந்தனர்.

பதிலுக்கு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்கா, மழையால் முன்னரே நேற்றைய மூன்றாம் நாள் முடிவுக்கு வருகையில் ஒரு விக்கெட் இழப்புக்கு 15 ஓட்டங்களைப் பெற்று அவுஸ்திரேலியாவின் முதலாவது இனிங்ஸை விட 371 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது.

களத்தில் சரெல் எர்வீ ஏழு ஓட்டங்களுடனும், தெனியுஸ் டி ப்ரூன் ஆறு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை கமின்ஸ் வீழ்த்தியிருந்தார்.



## இராஜினாமா செய்த பங்களாதேஷ் பயிற்சியாளர் டொமிங்கோ

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் ரஸல் டொமிங்கோ, உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

முன்னாள் பயிற்சியாளர் சந்திக ஹத்துருசிங்கவே டொமிங்கோவைப் பிரதியிடுவதில் முன்னணியில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளுக்கு ஶ்ரீதரன் ஶ்ரீராம் பொறுப்பாகவுள்ள நிலையில், டெஸ்ட் போட்டிகளுக்கு ஒரு பயிற்சியாளரையும், மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கு இன்னொரு பயிற்சியாளரையும் பங்களாதேஷ் வேண்டுவதாகக் கூறப்படுகிறது.

## எவெர்ற்றனிலிருந்து வெளியேறும் பிக்ஃபோர்ட்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான எவெர்ற்றனின் கோல் காப்பாளரான ஜோர்டான் பிக்ஃபோர்ட்டைக் கைச்சாத்திட வேறு பிறீமியர் லீக் கழகங்களான செல்சி, மன்செஸ்டர் யுனைட்டெட், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் முயல்வதாகக் கூறப்படுகிறது.

வாய்மொழி மூலமான ஐந்தாண்டு ஒப்பந்தத்துக்கு 28 வயதான பிக்ஃபோர்ட்டுடன் எவெர்ற்றன் இணங்கியதாகக் கூறப்படுகின்றபோதும், ஒப்பந்தம் இன்னும் கைச்சாத்தாகவில்லை எனத் தெரிகிறது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 29 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.